தென்மொழி

T. 5846



உரிமை பெற விரும்பாத உளமென்ன உளமோ?

அனைவருமே திரண்டெழுந்தால்
அரசாட்சி என் செய்யும்?
முனைவோர்க்குக் கடலாழம்
முழங்காலென் றறியோமோ?

பழகு தமிழ் இந்தியினல்
பாழடையக் கண்டிருந்தும்,
உழுவோரும் உழைப்போரும்
உயிர் வாழா நிலையிருந்தும்,

மதமென்றும் சாதியென்றும்
மடம் பரவப் பார்த்திருந்தும்
முதலினமாம் தமிழினமோ
முழு அடிமைப் பட்டிருந்தும்,

உரிமை பெற விரும்பாத
உளமென்ன உளமோ?
உடனெழுந்து பாயாத
உரமென்ன உரமோ?

தே.எண்: 26043

விலை

ஆசிரியர்

சுவடி: 2

நமக்கு வந்த மடல்கள்.

1191: பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம். தங்களின் தென்மொழியைத் தொடர்ந்து படித்து வருகிறேன். திசம்பர் மாதத் தென்மொழி சுவடி 22: ஓலை 12 இதழ் படித்தேன். அதில் 'தமிழமல்லன்' என்பவர் தங்களுக்கு அறிவுரை கூறுவதையும் அறிந்தேன்.

மனத்தில் என்ன நினைத்துக் கொண்டு அப்படிக் கூறினர் என்பது தெரியவில்லை. நடப்பதை முன் கூட்டியே சொல்லும் இவரிடம் பலரும் வந்து அறிவுரை கேட்டுச் செல்லலாம் போல் தெரிகிறது! இவர் தாங்கள் பிறப்பதற்கு முன் பிறந்தவர் என்று நினைக்கிறேன். இல்லையேல் தங்களுக்கு அறிவுரை கூறும் அளவிற்கு துணிவாரா?

தமிழமல்லன் என்று பெயர்தானே தவிர தமிழ்ப் பற்று துளியும் இல்லை. தமிழறிஞராகிய உங்களுக்கு அறிவுரை கூறும் இத் தமிழ் அறிஞர் யாரோ?

இவ்வறிஞரை நம் தமிழ் நாட்டில் வைத்துக்கொண்டு நாம் கவலைப்படுவானேன்? இவரை அமைச்சர் அல்லது தலைமை அமைச்சர் இவர்களுக்குக் கருத்தாளராக அமர்த்தலாம் போலும்! இவர் எந்த அரசியலைக் கண்டாரோ தெரியவில்லை? தங்களையும் ஓர் அரசியல் தலைவர் ஆக்கிவிட்டார்.

'ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுறிந்து வேந்தனும் வேந்து கெடும்' எனும் திருக்குறளைத் தமிழமல்லன் அவர்களுக்கு நினைவு படுத்துகிறேன்.

ஐயாவைப் பேசியவர், ஏசியவர் அனைவரும் அவர் உயர்ந்தவுடன் ஒட்டிக் கொண்டவர்கள். ஐயாவாவது மூன்று இதழ்களை நடத்திக் கொண்டு வருகிறார்கள்.

தாங்கள் ஓர் இதழாவது தமிழ், தமிழ் என்று தொடர்ந்து நடத்துங்களேன். ஐயா அவர்கள் பல தொல்லைகளையும் தொடர்ந்து வெற்றி கொண்டு அரிமாப்(சிங்கம்)போல் நிமிர்ந்து நிற்கிறார். இன்னும் எழுத நிறைய உள்ளன. இந்தக் கடிதத்தில் இவ்வளவு போதும். அறிவுரை கூறும் இத் தமிழமல்லன இத்துடன் நிறுத்திக் கொள்ளட்டும். நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் மிக்க அன்புத் தமிழ்த் தொண்டாள். **-நிர்மலாதேவி** புதுச்சேரி--1

பின் குறிப்பு: பிழைகள் இருப்பின் மன்னிக்க வேண்டுகிறேன்.

மற்றவர்களைக் குறை கூறும் தென்மொழி அன்பர்கள் ஒரு சிலர் இருப்பார்கள்; அவர்களும் இந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளட்டும்.

1192: பாநலம் பழுத்த பைந்தமிழ் வேந்தே! வணக்கம். ஐயா, தென்மொழியில் உங்களின் "பெருஞ்சித்திரனார் விடையளிக்கிறார்" கண்டு மிக்க மகிழ்ச்சியுற்றேன். பாட்டுக்கு இலக்கணம் என்ற தலைப்பில் ஒரு பக்கம் அல்லது ஒன்றரைப்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்
ஆசிரியர்:மா.பூங்குன்றன்.க.மு; அமைச்சர்: கல்லை-அருட்செல்வன்
புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்து குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இராமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி சு.ஆர். பிரான்சிசு, தென்மொழி கா.இளமுருகன், தென்மொழி த. தனியல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன், பாவலர். சா. சி. குப்பையா, பாவலர். அ. பு. திருமாலனார், தென்மொழி த. அரிமா வளங்கோ. பொன். பாலகிருட்டிணன்.
(தொலைபேசி : 847829)

சுவடி 23] [illegible] (திசம்-'86சன-'87) [ஓலை 1

நடுவணரசின் கையாளாகச் செயல்படுகிறாரா, சிதம்பரம்?

பெரும்பாலும் தமிழர்களிடமிருந்து நடுவண் அமைச்சரவைக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் பொழுது, பல்வேறு தகுதிகளுடனும், அவர்கள் தில்லியரசுக்கு முழு ஒத்துழைப்புக் கொடுக்கக் கூடிய அடிமைத் தனமுள்ளவர்களாகவும் உள்ளார்களா, என்பதையே

தலைமையமைச்சரும் அவரைச் சார்ந்த பிற வடநாட்டுத் தலைவர்களும் மிகக் கவனமாகப் பார்க்கிறார்கள். அப்படித்தான் கடந்த காலங்களில் திருவாளர்கள் ஓ. வி. அளகேசன், சி. சுப்பிரமணியம், மரகதம் சந்திரசேகரன் முதலியோர் தேர்ந்தெடுக்கப் பெற்று, வடநாட்டுக் கங்காணிகளுக்கு மிகமிக நல்ல பிள்ளைகளாக நடந்து, தங்கள் நன்றியறிதலைக் காட்டிக் கொண்டார்கள்.

அவர்களைப் போலவே இப்பொழுது நடுவண் உள்துறைத் துணையமைச்சராக அமர்த்தப் பெற்றுள்ள திரு. ப. சிதம்பரமும், தமக்கு எதிர்பாராத வகையில் கிடைக்கப் பெற்ற பதவியின் தகுதிக்கேற்ப, முன்னவர்களைவிட பல படிகள் கூடுதலாகவே நடுவணரசுக்கு, குறிப்பாக அவர் ஆண்டை, இராசீவ் காந்திக்கு மிக மிக நன்றியுள்ளவராகவே நடந்து கொண்டு வருகிறார் என்பதைப் பலவாறு மெய்ப்பித்துள்ளார்.

அவர் பெற்றுள்ளது இரண்டாந்தரமுள்ள துணையமைச்சர் பதவியே என்றாலும், அவர் தமிழர்களை வடநாட்டுக்காரர்களுக்கு என்றென்றும் அடிமையுள்ள மக்களாக ஆக்குவதற்காகவே அமர்த்தப் பெற்றுள்ளார் என்பது, அவர் குரல் அடிக்கடி தமிழ் நாட்டில் தமிழர்க்காகவே ஒலிப்பதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அவர் தமிழராக இருப்பதால் பாராளுமன்ற முழுத் தகுதியுள்ள முழு அமைச்சர் பதவியில் அமர்த்தப் படவில்லை என்பது அவருக்குத் தெரியுமோ தெரியாதோ, அவரைப் பொறுத்தவரை துணையமைச்சர் பதவியே அவரை முழுவதுமாக தில்லியரசுக்கு அடிமை கொள்ளப் போதுமானது என்று அவரும் நினைத்து முழு நிறைவு கொண்டிருக்கலாம்; தில்லியரும் நினைத்து முழு மகிழ்ச்சியுற்றிருக்கலாம். எப்படியோ, நன்றியுள்ள நாய்க்கு ஓர் எலும்புத் துண்டே அதை வயப்படுத்தப் போதுமான பொருளாக இருக்கும் என்பது தில்லி மணியக்காரர்களுக்குத் தெரிந்திருப்பதைப் போலவே, நம் சிதம்பரத்திற்கும் தெரிந்தே இருக்கிறது என்பதை நாம் முழுமையாக நம்பலாம். இஃது ஒருபுறம் இருக்கட்டும்.

திரு. சிதம்பரத்தின் நடவடிக்கைகளைக் கூர்ந்து நோக்குபவர்க்கு, அவர் தமிழின மக்களை எப்படியெப்படி ஆற்றுப் படுத்தித் தில்லி முதலாளிகளுக்குக் கொத்தடிமைகளாகச் செய்ய முற்பட்டு வருகிறார் என்பது தெரியாமல் போகாது. எந்தத் தமிழ் நாட்டுச் சிக்கலானாலும் சரி, அதில் முதலில் வாய்வைப்பது நம் துணையமைச்சர் சிதம்பரமாகவே இருக்கும். எல்லாம் தெரிந்த ஒரு மேதையைப் போல அவர் எதிலும் முன்னதாகவே தலையிட்டு முதல் முதல் கருத்தறிவிப்பதும், தமிழின உரிமைத் தேவைகளை யெல்லாம் பேசி பெழுதுவதும், நாளுக்கு நாள் அவரைத் தில்லிக்கு மிகவும் வேண்டிய நல்ல பிள்ளையாக ஆக்கியிருக்கின்றன. இவருடைய பேச்சும் நடைமுறைகளும், இவர் கையாளும் கங்காணித் தந்திர உத்திகளும், பழைய வீடண பக்தவத்சலத்தையும், சுக்கிரீவ சுப்பிரமணியத்தையுமே ஒருபடி தாழ்த்தி மதிப்பிடச் செய்திருக்கின்றன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

அத்துணையளவு, தமக்குக் கொடுக்கப் பெற்ற தமிழின மேய்ப்பு வேலையை மிகத் திறம்படச் செய்து வருகிறார் திரு. சிதம்பரம் என்றால் இது மிகையான கூற்றாக இருக்க முடியாது. அண்மையில் அவர் சென்னைக்கு வந்திருந்து செய்தியாளர்களிடம் தமிழீழத்தைப் பற்றித் திருவாய் மலர்ந்துள்ள 'கீதை' உரைகள் அவரின் முழுத்தன்னடிமைத் திறத்திற்கும் தலையாய ஓர் எடுத்துக் காட்டாகும். அவர் கூறிய கருத்துகளில் கீழ்வருவன மிகவும் கவனிக்கத் தக்கனவாகும்.

"இந்தியாவின் ஒப்புரவு முயற்சி (அவர் கூறியது **சமரச** முயற்சி என்பது! என்ன **சமரசமோ?**) மெல்ல மெல்ல முன்னேறி வருகிறது. (எங்கு முன்னேறி வருகிறது? அவர் வீட்டிலா?) இந்த நேரத்தில் மோதல்கள் தவிர்க்கப்பட வேண்டும். (அஃதாவது சிங்களவர்கள் தமிழர்களை அன்றாடம் கொன்று குவித்துக் கொண்டிருந்தாலும், போராளிகள் அவர்களுடன் மோதக் கூடாது. அக் கொலைக் கொடுமைகளை அன்புடனும் அமைதியுடனும் ஏற்றுக் கொள்ள வேண்டும்!) இதைத்தான் இந்திய அரசு (அஃதாவது எரிகிற வீட்டில் பிடுங்குவதற்காகவே என்னை விலைக்கு வாங்கியிருக்கும் இராசீவ் குழுமம்) விரும்புகிறது!"

அவர் மேலும் கூறுகிறார்! "இலங்கைத் தமிழர்களிடத்தில் இந்திய அரசு பெரிதும் இரக்கம் (அவர் மொழியில் அனுதாபம்!- என்ன **தாபமோ?**) கொண்டுள்ளது." (எதற்கு? மேலும் மேலும் தமிழர்கள் குண்டடிபட்டுச் சாகிறதற்கா?)

"ஒன்றுபட்ட இலங்கைக்கு உட்பட்ட அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். (இவரையும் சேர்த்துக் கொண்டு சொல்கிறார்.) இவ்வாறு கூறும்போது தனி ஈழம் என்பது அடிபட்டுப் போகிறது. (தனி ஈழம் என்பது அடிபட்டுப் போகிறதாம். அடிபட்டுச் சாகிறது என்பதை அவர் 'பாணி'யில் கூறுகிறார்.)

அது போகட்டும். தனி ஈழம் என்பதைப் பெருக்கல் குறி போட்டு அடித்தவர் யார்? சிதம்பரமா? அல்லது அவர் சோற்றுக்கு அரிசி கொடுக்கிறாரே, அந்த இராசீவ் காந்தியா? அவருக்கு அதை அடிப்பதற்கு என்ன தகுதியிருக்கிறது? அது போகட்டும். அதை அடிப்பதற்கு என்ன கரிக்கோல் எழுத்தா? கரிக்கோல் எழுத்தோ, மை எழுத்தோ, அல்ல; மன எழுத்தடா, மடப் பயல்களே! இவ்வுலகிலுள்ள பதினேழு கோடித் தமிழர்களுள், பக்தவத்சலம், சுப்பிரமணியம், சிவஞானம், சிதம்பரம் போன்ற ஓர் அரை இலக்கம் வீடணப் பிறவிகளைத் தவிர்த்து, மீதியுள்ள அத்தனைத் தமிழர்களின் ஒருமித்த மனமுழக்கமடா, மூடர்களே!

ஓர் ஒப்பற்ற உயிரினத்தின் உரிமைக் குரலை, அதன் குருதிக் கோரிக்கையை, அதன் நெஞ்சாங்குலைத் துடிப்பை- ஏதோ அழிப்பான் கொண்டு அழித்தெடுப்பதைப் போலப் பேசும் இராசீவின் இளைய தம்பி சிதம்பரத்திற்கும், அவரைச் சேர்ந்த வீடணப் பிரகலாதன்களுக்கும் சொல்லிக் கொள்கிறோம், தமிழீழத்தின் உரிமைக் குரலோ அல்லது தமிழகத்தின் விடுதலைக் குரலோ, எந்தக் கொம்பனாலும் அடக்கி விட முடியாதவை! ஒடுக்கி விட இயலாதவை.

அவை வெறும் சிதம்பரத்தின் மாமியார் வீட்டு ஒட்டுத் திண்ணையன்று, இடித்து விடுவதற்கு! அழித்தொழிக்க முடியாத வரலாறு! அதை ஆக்கத்தான் முடியுமே தவிர, அழிக்க முடியாது. சிதம்பரத்தைப் போலும் இழிவுத் தமிழ்ப் பிறவிகள் ஒரு சில இவ்வினத்தில் தப்பிப் பிறந்துவிட்ட அந்த இழிவாலேயே இம் முழக்கம் வெறும் வறட்டு இருமலாகி விடாது.

இன்றன்று; நாளையன்று; நாங்களல்லர்; இனி வருங்காலத் தமிழர்களல்லர்; என்றாலும் எவராலும் தமிழீழமும் தமிழ்நாடும் உரிமை பெறத்தான் போகின்றன! அஃது உண்மை! வெறும் சிதம்பரங்களோ, இராசீவ் காந்திகளோ, அவற்றை அழித்துவிடவோ, ஒழித்துவிடவோ முடியாது. அவர்களுடைய பாட்டன்களே பிறந்து வந்தாலும் ஓர் இம்மியளவும் அவற்றின் மெய்ம்மத்தைச் சிதைத்து விட முடியாது.

சிதைப்பவர்கள் சிதைந்து போவார்கள்!
அழிப்பவர்கள் அழிந்து போவார்கள்!

உரிமை நெருப்பை வாயால் ஊதி அணைத்து விடத் துடிக்கும் தில்லியரசும், அது போடும் இரவல் சோற்றுக்காக வாயைப் பிளந்து கொண்டு வயிற்றை நிரப்பத் துடிக்கும் தமிழினக் குயக் கொண்டான்களும் வாயை மூடிக் கொண்டு கிடக்கட்டும். பெறுகிற வழியில் தமிழீழம் பெறப்படும்! வருகிற வழியில் தமிழக விடுதலை வரட்டும்!

பண்டாரியும், திவாரியும், சாரதியும் கூறினால் தமிழர்கள் ஒப்பமாட்டார்கள்; சிதம்பர தமிழனைக்கொண்டே தமிழீழ உரிமை நெருப்பை அணைத்து விடலாம்என்று கனவுகண்டே சிதம்பரத்தை இவ் விடுதலைத் தூர்ப்பு வேலைக்குச் சிற்றாளாக அனுப்பியுள்ளார், இராசீவ் மேலாளி என்பது நமக்குத் தெரியும்! ஆனால் அதைச் சிதம்பரங்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே நம் விருப்பம்! விருப்பம் நிறைவேறாவிட்டால் அது நெருப்பாக மாற நாளாகாது என்பதைச் சிதம்பரமும் இராசீவும் இந்திய அரசும் உணர்ந்து கொள்ளட்டும்! 0

அஞ்சல்துறைக் கொள்ளையா? அல்லது கருத்துப் பரவுதலைத் தடுக்கும் கொடுமையா?

அண்மையில் நடுவணரசு பிற வரி உயர்த்தங்கள், பொருள் விலை ஏற்றங்கள் இவற்றுடன் அஞ்சல் கட்டணங்களையும் மிக அதிக அளவில் உயர்த்திப் பொதுமக்களுக்கு வாழ்க்கைச் சுமைகளை மிகவும் கூடுதலாக்கியிருக்கிறது. பொதுமக்களுக்கு அஃதாவது ஏழை எளியவர்க்கு எவ்வளவு துன்பங்கள் நேர்கின்றன என்பதைப்பற்றித் துளியும் எண்ணிப்பாராத- இரக்கம் கொள்ளாத இம்முதலாளிய அரசு, பணக்காரர்களுக்கு நேரிடையாகவும் மறைமுகமாகவும் அவர்களின் கொள்ளையடிப்புக்கு ஊறு நேராத வகையில் பலவகையான வரிச் சலுகைகளையும் ஏற்றுமதி இறக்குமதி வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அத்துடன், அவர்களின் பொழுதுபோக்குக்குத் துணைசெய்யும் வகையில் ஒவ்வொரு நாளும் 'அப்னு உத்சவ்' 'யுவ உத்சவ்' முதலிய பெயர்களில் வேலையற்ற இளைஞர்களின் சோம்பேறித்தனங்களை வளர்க்கும் வகையிலும், பல இலக்கக் கணக்கான வரிப்பணங்களை வீணடிக்கின்ற முறையிலும் பல வீணான பணக்கார விளையாட்டுகளை நடத்தியும், அவ்விளையாட்டுகளின் காட்சிகளைத் தொலைக்காட்சி, வானொலி முதலியவற்றில் ஒளி, ஒலி பரப்புகளை நிகழ்த்தியும் வருகின்றது, தில்லியரசு!

இவை பற்றியெல்லாம் எதிர்க்கட்சிகளும் வேறு பொது நலம் கருதும் நாட்டுத் தலைவர்களும் எவ்வளவு கத்தினாலும் எதிர்ப்புத் தெரிவித்தாலும் நடுவணரசின் அதிகார அகங்காரச் செருக்கு மிகுந்த அமைச்சன்மார்கள் அவற்றைத் துளியும் காதில் போட்டுக் கொள்வதே இல்லை. மக்களின் உண்மையான உரிமைக் குரலை நெரிப்பதே நடுவணரசுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய அதிகார விளையாட்டாக உள்ளது. இவை பற்றி ஏற்கனவே உள்ள கவலைகளுக்கிடையில்தான் திடுமென இப்பொழுது இன்றியமையாத பொருள் விலை ஏற்றங்களும், அஞ்சல் கட்டண உயர்வுகளும் அறிவிக்கப் பெற்றிருக்கின்றன.

அஞ்சல் கட்டண உயர்வு என்றால் ஏதோ கால் பங்கு அரைப் பங்கு என்றில்லை. அதுவும் சலுகைக் கட்டணங்களுடன் அனுப்பப் பெறும் செய்தித்தாள்களைப் பொறுத்தமட்டில் மூன்று பங்குக் கட்டணம் திடுமென உயர்த்தப் பெற்றிருக்கிறது. இது மிக மிகக் கொடுமையானதும் செய்தித்தாள்களின் குரல்வளையையே நெரிக்கின்றதுமான கட்டண உயர்வாகும். ஓரிதழுக்கு 5 காசு ஒட்டவேண்டியிருந்த நிலை போய், 15 காசு ஒட்ட வேண்டிய கொடுநிலை இப்பொழுது வந்துள்ளது. நம்மைப் பொறுத்த நிலையில் மாதம் ஆயிரம் உருபா அளவில் ஆகிக் கொண்டிருந்த அஞ்சல் செலவு, இப்பொழுது செய்த கட்டண உயர்வால் மாதம் மூவாயிர உருபா அளவுக்கு உயர்ந்துள்ளது என்றால், நம்மை விட மிக மிக அதிகமாக இலக்கக் கணக்கில் அச்சாகி வெளியாகிக்

கொண்டிருக்கும் தாளிகைகளுக்கு ஆகின்ற அஞ்சல் செலவை நாம் எண்ணிப் பார்ப்பதே கடினமாக உள்ளது. ஆனால் அவையெல்லாம் கூட அவற்றின் மிகுதி வருமானத்தைக் கொண்டு, இத் திடீர்ச் செலவு உயர்வைச் சரிக் கட்டிக் கொள்ள முடியும். சில முதலாளியத் தாளிகைகளுக்கோ இவ்விலையேற்றம் யானையை எறும்பு கடித்தது போலும் ஒரு தாக்கத்தையே உண்டாக்கியிருக்கும்! இன்னுஞ் சொன்னால், அவை அரசுக்குச் சார்பாக உள்ள அரசின் பலவகையான சலுகைகளையும், அரவணைப்புகளையும் நேரிடையாகவும் மறைமுகமாகவும் பெற்றுக் கொள்ளும் செல்லக் குழந்தைகளே! அவற்றிற்கு ஒரு வேளை இவ்வஞ்சல் கட்டண ஏற்றம் சுமையாக இல்லாமலும் இருக்கலாம்!

ஆனால், நம் போன்ற ஏழைத் தாளிகைகளுக்கு, நேர்மையற்ற, முதலாளியப் பார்ப்பனியக் கொள்ளைக்கார, கொலைகார அரசுக்கு எதிரானவையாகவும், இங்குள்ள பல்லாயிரங்கோடி ஏழைகளுக்குச் சார்பானவையாகவும் இயங்குகின்ற - உண்மையான - மக்கள் நலம் கருதுகின்ற - அவர்களுக்கு விழிப்புணர்வை ஊட்டுகின்ற - வெளிப்படையாகச் சொன்னால், இந் நாட்டில் அறியாமையும் அடிமைத்தனமும் உள்ள கோடிக்கணக்கான மக்களைச் சிந்திக்கச் செய்து, அம்மக்களை ஒரு குமுகாய, அரசியல், பொருளியல் புரட்சிக்கு அணியப்படுத்த முயற்சி செய்கிற கொள்கை நோக்கம் கொண்ட தாளிகைகள், செய்தித்தாள்கள் ஆகியவற்றுக்கு, இப்பொழுது செய்திருக்கின்ற அஞ்சல் கட்டண உயர்வு ஒரு பெரிய கொள்ளையடிப்பும், உண்மையான கருத்துப் பரவுதலைத் தடுக்கின்ற பெருங் கொடுமையுமாகும்.

உண்மையான கருத்துகள் பரவக்கூடாதென்று ஏன் அரசு நினைக்க வேண்டும்? மக்கள் விழிப்படையக் கூடாது என்பதுதான் அதன் நோக்கம், கொள்கை! அவ்வாறு மக்கள் இவ் வரசின் உண்மையான செயல்பாடுகளையும், அவற்றின் உள்முகமான நோக்கங்களையும் உணர்ந்து கொள்வார்களானால், இக் கொடுமை வாணிகப் பார்ப்பனீயக் கொள்ளை வல்லதிகார அரசை இன்றைக் கில்லையேனும், என்றைக்கேனும் ஒரு நாள் அரசுக் கட்டிலிலிருந்து அகற்றியே அல்லது வீழ்த்தியே தீருவர் என்பது உறுதி. இந்நிலை ஏற்படக் கூடாது என்னும் நிலைக்கு என்னென்ன வகையில் பித்தலாட்டங்களையும், அவர்களைச் சிந்திக்க வழி விடாமல் திசை திருப்புகின்ற (விளையாட்டு, வேடிக்கை முதலிய பொழுது போக்குகள், இந்துமத மூட நம்பிக்கைகளை வளர்க்கின்ற, அறியாமைகளை விதைக்கின்ற, மக்கள் மனவளர்ச்சியை அரித்து அறிவுணர்வுகளைத் தின்கின்றவை முதலிய) செயல்பாடுகளையும் செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்கிறது, இராசீவ் அரசு!

எனவேதான் கருத்துகள் பரவுதலை இது பல வகையிலும் மறைமுகமாகத் தடுக்கிறது. குறிப்பாகச் செய்தி அச்சுத்தாள்கள். மைகள். அச்செழுத்துகள், அச்சுப் பொறிகள் முதலிய அனைத்தும் இந்திரா, இராசீவ் ஆகியோர் அரசுக்கு வரும்பொழுது ஒன்று

யிருந்தால் இப்பொழுது பத்து மடங்கு விலையேறியிருக்கின்றன அஞ்சல் கட்டணமோ (செய்தித்தாளுக்கு மட்டும் 2 காசாக இருந்தது, இந்திரா காலத்தில் 5 காசாக உயர்ந்து, இப்பொழுது 15 காசாக, 8 மடங்காக உயர்ந்திருக்கிறது. இவ்வுயர்வு இப்பொழுது கட்டாயம் தேவையா? இல்லவே இல்லை. தேவையே இல்லாத நிலையில் இக் கட்டண உயர்வை ஏன் செய்ய வேண்டும்?

அரசுக்குச் செலவு கூடி, வரவு போதவில்லையென்றால், இராசீவும் அவர் பரிவாரமும் வெளிநாடுகள் போய்ச் சுற்றி வருவதையும் விளம்பரந் தேடுவதையும், உலக நாடுகளில் தம் சாய்காலை வலுப்படுத்திக் கொள்வதையும், அவருக்கு நாங்கள் சளைத்தவர்களல்லர் என்று அவரின் கொடுமுதலாளிய மனப்பாங்கு கொண்ட மாண்புகளும் அவ்வாறே செய்வதையும், விளையாட்டு வேடிக்கைக் கூத்தடிப்புகளையும் நிறுத்தினாலே, போதுமே! அதை விட்டு விட்டு ஏழைகளின் தலைமேல் வரிச்சுமைகளையும் வாழ்க்கைச் சுமைகளையும் ஏற்றிக் கொண்டே வருகிறார்களெனில் அதற்குப் பொருளியல் பற்றாக்குறை மட்டுமே காரணமாக இருக்க முடியாதன்றோ? அப்படி அதுதான் காரணமென்றால், அது பொதுமக்களிடமிருந்து அரசு, தன் ஆணவச் செலவுகளுக்காக வெளிப்படையாகக் கொள்ளையடிக்கின்றதென்றோ, அல்லது தனக்கெதிரான கருத்துப் பரவுதலைத் தடுக்கின்ற கொடுமை செய்கின்றதென்றோதான் முடிவு கட்ட முடியும். இரண்டில் எதுவானாலும் அல்லது இரண்டுமே அதன் நோக்கமானாலும், இத்தகைய மக்களுக்கு எதிரான பொருளியல் வன்முறை சான்ற அரசு நீண்ட நாளைக்கு நிலைத்து நிற்க முடியாதென்பது மட்டும் உண்மை என்று தெரிந்து கொள்க.

அன்பர்கள் கவனிக்கவும்!

தாங்க முடியாத தாள், அச்சுப் பொருள்கள் விலை ஏற்றத்தாலும், திடுமென அரசு உயர்த்திய முப்படி அஞ்சல் கட்டணங்களாலும், இவ்விதழ்கள் முதற்கொண்டு **தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்** ஆகிய இதழ்களின் விலையைத் தவிர்க்க முடியாமல் கூட்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. எனவே சனவரி மாதம் முதல் விலைகளும் உறுப்பினர் கட்டணங்களும் கீழுள்ளவாறு மாற்றி அமைக்கப் பெறுகின்றன. அன்பர்கள் இக்கூடுதல் விலையைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து ஆதரவு தர வேண்டிக்கொள்கிறோம்.

	தனியிதழ்	ஆண்டுக்கு	அரையாண்டுக்கு
தென்மொழி :	1.75	20·00	10·00
தமிழ்ச்சிட்டு :	0·75	9·00	இல்லை
தமிழ்நிலம் :	0·85	44·00	22·00

முன்னரே உறுப்பினர் கட்டணம் விடுத்துள்ளவர்களுக்கு இதழ்கள் கணக்கிட்டு விடுக்கப் பெறும். வெளிநாட்டுக் கட்டணங்களை எழுதித் தெரிந்து கொள்ள வேண்டுகிறோம்.

-அமைச்சர்.

1987-ஆம் ஆண்டில் உருசிய-தமிழ் அகராதி வெளியிடப்படும்!

1987-ஆம் ஆண்டில் இந்திய மொழிகளில் அகராதிகளை அதிக அளவில் வெளியிட 'உருசுகி யாசிக்' என்னும் சோவியத்து பதிப்பகம் முடிவு செய்துள்ளது.

உருசிய - இந்தி, உருசிய - வங்காளி அகராதிகள் ஏற்கனவே வெளியீடப் பெற்றுள்ளன. இந்த ஆண்டில் உருசிய தமிழ்-அகராதியும், உருசிய- கன்னட அகராதியும் பல்லாயிரக்கணக்கான படிகளாக வெளியிடப் பெறும்.

உருசிய - தமிழ் அகராதியில் 2,000க்கும் அதிகமான சொற்களும், உருசிய- கன்னட அகராதியில் 5,000 சொற்களும் இடம் பெறும். உருசியச் சொற்களைப் புரிந்து கொள்வதற்கான இலக்கண விளக்கங்களும் படங்களும் இந்தியாவின் வரலாறு மறறும் சோவியத்து மக்களின் வாழ்க்கை பற்றிய விளக்கங்களும் இவற்றில் இடம் பெறும்.

பள்ளிகளிலோ, தாமாகவோ உருசிய மொழி பயில்வோருக்கு இவை பயன்படும். குசராத்தி மற்றும் தெலுங்கு மொழிகளிலும் இத்தகைய அகராதிகளைக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன. இவ்வகராதிகளைத் தொகுப்பதற்குச் சோவியத்து மற்றும் இந்திய மொழி இயலாளர்கள் ஒத்துழைக்கின்றனர்.

உருசிய -இந்தி அகராதியின் கையடக்கப் பதிப்பு ஒன்று வெளியீட்டிற்கு அணியமாகிறது. சமசுக்கிருத- உருசிய அகராதியின் மறுபதிப்பு விரைவில் வெளியிடப் பெறும். இந்த அகராதிக்குச் சோவியத்து நாட்டிலும் வெளி நாடுகளிலும் மிகுந்த வரவேற்பு இருப்பதால், மறுபதிப்பு வெளியிட உருசுகி யாசிக் பதிப்பகம் தீர்மானித்துள்ளது.

புகழ்பெற்ற சோவியத்து இந்திய இயலாளரான வீராகோசர்கிஞ, 1978-இல் இந்த அகராதியை முதன் முதலில் தொகுத்து அளித்தார். இதன் முதல் பதிப்பில் 28,000 சமசுக்கிருதச் சொற்கள் இருந்தன; இப்போது புதிய பதிப்பில் மேலும் பல சொற்கள் இடம் பெற்றுள்ளன.

பி. கு: தமிழ் அகராதியில் இடம் பெறும் சொற்கள் 2000; சமசுக்கிருதத்தில் 28000; சமசுக்கிருத உருசிய நட்புறவு எத்தகையது என்று எண்ணிப் பார்மின்!

சென்னை, பெரியார் திடலில் திசம்பர் 27, 28-இல் நடந்த தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்குத் தீர்மானம்:

தமிழ்நாட்டை முழு இறைமையுடைய தனிநாடாகப் பிரித்துத் தமிழரே ஆளுமை செய்வது!

தழைக தமிழ்நெறி!

பாவலர். அ. பு. திருமாலனார்.

(ஆசிரியர் குறிப்பு : இங்கு, மலேசியா, செலாமாவிலுள்ள 'தமிழ்நெறிக் கழகத்தின்' தலைவர் பாவலர் அ. பு. திருமாலனார் கடந்த 12-6-83-ஆம் பக்கல் சுங்கை போக்காவில் ஆற்றிய உரை கட்டுரை வடிவில் தரப்பெறுகிறது. இதை அன்பர்கள் படித்து உண்மை தெளிவார்களாக.)

இந்த உலகில் எத்தனையோ இனங்கள் இருக்கின்றன. எத்தனையோ நாடுகள் இருக்கின்றன. அந்த இனங்களுக்கெல்லாம் அவற்றிற்கேற்ற மொழிகள் இருக்கின்றன. அந்த மொழியாலும் இனத்தாலும் பண்படுத்தப்பட்ட வரலாற்று நிலைகள் இருக்கின்றன. பண்பாடுகள், சமயங்கள் இருக்கின்றன. ஆனால் நம்முடைய இனம், அதனுடைய வரலாறு என்பது அவ்வளவு தெளிவாகவும், வெளிப்படையாகவும் நம்மிடையில் இல்லை. அதற்குரிய சூழ்நிலைகளும் அதற்குரிய ஏடுகளும் நம்மிடையே இல்லை. நம்முடைய கல்விக் கூடங்களிலே வரலாறுகளைப் புதுக்கி எழுதவேண்டும் என்றெல்லாம்கூட சொல்லுகின்ற நிலை இந்த நாட்டிலேதான் இருக்கின்றது. இந்த நாட்டிலே தன்னுரிமை கிடைத்த பின்பு நமக்கென ஒரு வரலாறு, நம் மொழிக்கென ஒரு வரலாறு, ஒரு நிலைத்தன்மை, ஒரு செம்மாந்த இலக்கிய வரன்முறைகளெல்லாம் வேண்டுமென்று நாம் பாடுபடுவதிலே உண்மை இருக்கின்றது. அதைப் பார்க்கின்ற நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இந்த நிலைகளெல்லாம் இந்தத் தமிழ் மொழிக்கு ஒரு காலத்தில் இருந்திருக்க வேண்டும்! ஒரு மொழி இயல்பாகவே படிநிலை வளர்ச்சியில் வளர வேண்டும். இந்நாட்டுப் பழங்கதைகள் சொல்வதுபோல - பாரதியார் சொல்வதுபோல,

'ஆதி சிவன் பெற்றெடுத்து
ஆரிய மைந்தன் அகத்தியன்'...கையிலே கொடுத்து அந்த அகத்தியன் தமிழென்ற குழந்தையை எடுத்து மேலும் இலக்கணம் செய்து கொடுத்தது போல ஒரு மொழி பிறப்பதில்லை, உலகத்திலே.

மொழியியலாய்வாளர்கள், மொழி என்பது படிநிலை வளர்ச்சியில் தோன்றுவதென்று கூறுவார்கள். அதுதான் உண்மை. மொழியைக்கூட இறைவனே வந்து தோற்றுவித்ததாகவும், அப்படி தோற்றுவித்த அந்த மொழியை ஓர் ஆரியப் பாப்பனரிடத்திலே ஒப்படைத்தபின்பு அந்த அகத்தியன் என்னும் ஆரியப் பார்ப்பனன் அதற்கு மேவும் இலக்கணம் செய்து கொடுத்தது போலவும் பொய்யான ஒரு தோற்றத்தை நம்மிடத்திலே எழுதி வைத்திருக்கிறார்கள்.

ஒரு மொழி அப்படித் தோன்றுவதில்லை. இயல்பாக உணர்வுகள் வெளிக்கிளம்பி ஓசையாக வந்து, அந்த ஓசைகள் நாளடைவிலே வடிவம் பெறுகின்றன. அந்த ஒலிவடிவம் எழுத்துவடிவமாக அஃதாவது வரிவடிவமாக ஆகின்றது. இந்த நிலையை அடைவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகள் தேவைப்படும். இந்த அடிப்படையிலே தமக்கு வரிவடிவம் கிடைத்ததாக நம்முடைய வரலாறு கூறுகின்றது. கிட்டத்தட்ட 25,000 ஆண்டுகளுக்கு முன்னால் அஃதாவது கடல் கொள்ளாக் காலத்திற்கு முன்னால் இருந்த குமரிக் கண்டமான இலெமூரியாக் கண்டத்திலே, எழுத்துவடிவம் தோன்றிய மொழி தமிழ்மொழி என்று சொல்லப்படுகின்றது. ஓர் ஒப்பீட்டுக்காக நான் சொல்லுகிறேன். உலகமொழி என்று சொல்லப்படுகின்ற ஆங்கில மொழி ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததே இல்லை. அதற்கு வடிவமே இல்லை. ஆங்கில மொழிக்குச் சொற்களே இல்லை. இப்போதுகூட ஆங்கில மொழியின் அகராதிகளில் ஒவ்வொரு சொல்லையும் எப்படிப் பலுக்குவதென்று குறித்திருப்பார்கள். A B C D எனத் தொடங்குகின்ற ஆங்கில 26 எழுத்துகளையும் படித்துவிட்டு, அந்த மொழியில் உள்ள சொற்களை நாம் படித்துவிட முடியாது. ஒரு புதிய சொல்லைப் பயன்படுத்துகிற பொழுது, அந்தச் சொல்லை எப்படிப் பலுக்கவேண்டும் என்று நமக்குத் தெரியாது. அதை அகராதியிலேதான் பார்த்து, இப்படித்தான் பலுக்கவேண்டும் என்று எழுதியிருப்பார்கள். ஏனென்றால் சில இடங்களிலே TIO என்றால் அந்த மொழி 'ச' என்று கூட அதை பலுக்கச் சொல்லும். Station என்று சொல்லுகின்ற சொல்லில், தனியாகச் சொல்லுகின்றபொழுது T என்றும், அதை Station என்று சொல்லுகின்ற பொழுது 'Tion - சன்' என்று வரும். எனவே, எழுத்துகள் தனியாக வருகின்றபொழுது ஓர் ஓசையும், அது கூட்டு எழுத்தாக வருகின்ற பொழுது வேறு ஓசை ஆகவும் இருக்கும். 'C' சில இடத்திலே 'செ' என்ற அடிப்படையிலே ஒலிக்கும். சில இடத்திலே 'கெ' என்றும் ஒலிக்கும். இஃது ஆங்கில மொழிக்குள்ள குறைபாடு. எதற்கு இதைச் சொல்லுகின்றேன் என்றால் 1000 ஆண்டுகளுக்குமுன் பிறமொழிகளைப் பார்த்து அமைக்கப்பட்ட ஒரு மொழி ஆங்கிலம்.

அஃது இன்றைக்கு உலகமொழி; அந்த உலகமொழியாகிய ஆங்கிலத்திலே உரையாற்றுவதன்மூலம் தங்களை அறிஞர்களெனப் பிறர் எண்ணிக் கொள்வார்களெனச் சிலர் கருதுகின்றார்கள். ஆனால் அந்த ஆங்கில மொழியின் வரலாற்றை அவர்கள் சற்று உன்னிப்பாகப் பார்க்கவேண்டும். என்ன குறை என்றால் அவர்களுக்குத் தாய்மொழியின் தன்மை தெரியவில்லை. அஃது அவர்களுடைய குறைபாடு அன்று. அவர்களை ஈன்றவர்களின் குறைபாடு. அவர்களை ஈன்றவர்களின் குறைபாடும் அன்று. அந்த ஈன்றவர்களை ஈன்றவர்களின் குறைபாடு. இப்படி இந்த

வரலாற்றை நாம் பார்ப்போமானால் கிட்டதட்ட இருநூறு தலை முறைகள் நாம் நெறிகெட்டு வந்திருக்கின்றோம். இந்த இருநூறு தலைமுறைகளை நாம் தொகுத்துப் பார்ப்போமானால் 1500 அல்லது 2000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழன் தன்னுடைய உணர்வை இழக்கத் தொடங்கிவிட்டான்.

எனவே, வரலாற்றைத் தொட்டுங்குகின்ற பொழுது இன்றைய நமது தோழர்களும் இன்றைய நம் தோழியர்களும் ஆங்கிலத்திலே உரையாடித் தங்களை அறிஞர்களாகக் காட்டிக் கொள்கின்றார்கள் என்றால், அவர்களுடைய தாய்மொழியாகிய இந்தத் தமிழின் இனிமையை அவர்கள் உணரவில்லை என்றுதான் பொருள். அவர்கள் மீது குற்றமில்லை. இந்தநிலை மிகப் பழங்காலத்தி லேயே ஏற்பட்டுவிட்டது: ஏன்? அவர்களுக்கு வரலாறு தெரியாது. அவர்களுடைய தந்தையர்களுக்கே தெரிந் திருக்காது.

இதற்கெல்லாம் என்ன காரணம் என்று ஆராய்ந்து சொன்ன அறிஞர்களும் உண்டு. அஃது ஒரு பக்கம் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. அந்த வகையில்தான் நான் இங்கு சில வரலாற்று உண்மைகளை எடுத்துச் சொல்லும் போது சிலருக்கு அது கசக்க லாம். நம்முடைய 2000 ஆண்டுக்கால வரலாற்றிலே என்ன நடந்தது என்பதை நான் சுருக்கமாகச் சொல்லுகின்றேன். தமிழனுடைய வரலாற்றைத் தமிழனே எழுதியது கிடையாது. அதை நாம் முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். தமிழருக்கு வரலாற்றுத் தொகுப்பே கிடையாது. இன்றுகூட பெரும் பேராசிரியர் எல்லாம் தமிழர் வரலாறு தொகுப்பாக இல்லையே என்று மிகவும் வருத்தப்படுகிறார்கள்.

கடந்த நூற்றாண்டில் இந்தியாவை ஒன்று கூட்டி ஆண்டவர்-கள் ஆங்கிலேயர்கள். இந்த ஆங்கிலேயர்கள் காலத்தில்தான் நம்மையெல்லாம் இந்தியர்கள் என்று சொன்னார்கள். நாமெல் லாரும் இந்தியா என்ற கொட்டகைக்குள் அடைக்கப்பட்டு ஆடு களாக மாற்றப்பட்டு விட்டோம். அந்த 400 ஆண்டுக்காலத்திலே அதன் முற்பகுதியிலேயே நாமெல்லாரும் இந்தியர்களாக-மாற்றப் பட்டு விட்டோம். ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன் இந்தியா என்பது பல நாடுகளைக் கொண்ட ஒரு துணைக் கண்டமாகத்தான் இருந்தது. பல நாடுகளை, பல மொழிகளை, பல பண்பாட்டு அடிப்படைகளைக் கொண்ட ஒரு துணைக்கண்ட மாகத்தான் இருந்தது. ஆங்கிலேயர்கள் வந்து அந்த நாட்டை ஒரே நாடாக ஆக்கி ஆட்சி நடத்தினார்கள். அந்த ஆட்சி எளிமை யாக இருக்கவேண்டும் என்பதற்காக அதற்கு 'இந்தியா' என்று பெயர் வைத்து அரசியல் சட்டம் உருவாக்கினார்கள். அந்த அரசியல் சட்டத்தை ஆரியக் கோட்பாட்டை அடிப்படையாக வைத்துத்தான் உருவாக்கினார்கள். அந்தச் சட்டத்திற்குள்ளே நாம் இந்தியர்களாக ஆக்கப்பட்டுவிட்டோம்.

அவ்வாறு நம்மை ஆண்ட ஆங்கிலேயர் காலத்தின் பிற்பகுதியிலே அஃதாவது 1812-ஆம் ஆண்டிலே ஆராய்ச்சியாளர்கள் 'சிந்து நாகரிகம்' என்று கண்டு சொன்னார்கள். அந்த சிந்துப் பகுதியிலே அஃதாவது இன்று பாக்கித்தான் இருக்கின்ற இடத்திலே தோண்டி எடுக்கின்றபொழுது மொகஞ்சதாரோ, ஆரப்பா என்ற இரு பெரிய நகரங்களே புதைந்து கிடந்தன. அந்தப் பட்டினங்கள் பெரிய நாகரிகம் பெற்ற-இப்பொழுதைய 20-ஆம் நூற்றாண்டு நகர அமைப்பு எப்படி இருக்கின்றதோ, அவ்வாறே மாடி வீடுகள், சாலைகள், மேலே இருக்கின்ற கழிவறைகள், குழாய் வழியாகக் கீழே வந்து பெரிய சாளரத்துக்குள்ளே செல்லுகின்ற வாய்ப்புகளெல்லாம், அப்பொழுதே இருந்திருக்கின்றது.

இப்படிப்பட்ட வாய்ப்புகளெல்லாம் அந்த நகரங்களில் இருந்திருக்கின்றன. அந்த நகரங்களை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, அது கிட்டத்தட்ட 5000,6000 ஆண்டுப் பழைமையான நகரங்களென ஆங்கிலேயர்கள்தாம் கண்டுபிடித்தார்கள். 3000 ஆண்டு கிறித்துவிற்கு முன்னாலே போய்விட்டோம் என்றால், மாந்தன் காட்டு விலங்காண்டியாகத்தானே இந்த வட்டாரத்திலே இருந்திருக்கின்றான். ஆனால் இங்கு இப்படிப்பட்ட நாகரிகக்காரன் எவன் இருந்திருக்கக்கூடும் என்கின்ற ஓர் ஆராய்ச்சி - 6000 ஆண்டுகள் பழமை வாய்ந்தன இந்நகரங்கள். அப்படியென்றால் பெரிய நாகரிகம் பெற்ற ஓரினம் இங்கு இருந்திருக்கவேண்டும். அந்த இனம் எது- என்று ஆராய்ந்தார்கள். அப்போதிருந்த சூழ்நிலையிலே அந்த இனம் ஆரிய இனம் என்று முடிவு கட்டினார்கள், வரலாற்று ஆய்வாளர்களெல்லாரும். ஏனென்றால் ஆரியர்கள்தாம் மிகவும் உயர்ந்தவர்களாக அப்போது சொல்லப்பட்டிருந்தனர். தமிழர்களுடைய நாகரிக அடிப்படையிலே வளர்ந்த இந்திய நாகரிகம் உலகவரங்கிலே இந்து, இந்திய நாகரிகமாக சொல்லப்படுகின்றது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று தமிழன் எழுதினான். இந்திரா காந்தி அம்மையார் போய் உருசியாவிலே அஃது இந்திய நாகரிகமென்று சொன்னார்கள். உடனே இந்தியாவிலே இருக்கின்ற செய்தித்தாள்களெல்லாம் இந்திரா காந்தி அம்மையார் இந்தியாவின் பண்பாட்டுத் தன்மையை உலகவரங்கில் உயர்த்திவிட்டார் என்று பெருமைப் பட்டுக் கொண்டன. யார் வீட்டுப் பண்பாட்டுத் தன்மையை யாரெடுத்துச் சொல்லி யாரையா பேர் வாங்கிச் செல்வது? சிற்றூரிலே ஒரு பழமொழி சொல்வார்கள், 'நல்லவாயன் சம்பாதிக்க நாற்ற வாயன் தின்கிறான்' என்று. நேரமில்லாமல் நாம் பாடுபட இவர்கள் காலைக் கையை ஆட்டிக் கொண்டு பேர் வாங்கிக் கொள்கிறார்கள். இன்பமாக இருக்கிறார்கள். இந்திய நாகரிகத்தின் அடிப்படை உண்மைகள், இந்திய நாகரிகத்தின் அடிப்படைத் தன்மைகள் தென்னகத்தைச் சேர்ந்தவையே! ஆனால் பேர் வாங்கிக் கொள்பவர்கள் வடஇந்தியர்கள். ஏன் இந்த நிலையென்றால், நாமெல்லாரும் இந்தியர்களாக இருக்கின்ற வரை இந்தநிலை இருந்தேதான் தீரும்.

எனவே, அந்த வரலாற்று அடிப்படையைக்கூட அப்படித் தான் அவர்கள் சிந்தித்து, அ'தை இந்திய நாகரிகம் என்றும் சொன்னார்கள். நல்லவேளை ஈராசு பாதிரியார் என்றொருவர் வந்தார். பல ஆண்டுகள் அதை ஆய்வு செய்தார். நாடு முழு வதும் சுற்றிப் பார்த்தார். அங்கே கிடைத்த சிரந்த எழுத்துகள் அந்த வரிவடிவங்கள் அந்த நாகரிகங்கள் வடஇந்தியாவிலே எந்த இடத்திலேயும் பொருத்தமாக இல்லை. அது புதிதாக இருந்தது போல் இருக்கின்றது. ஏனென்றால் 'இலெமூரியாக் கண்டம்' அழிந்த பிறகுதான் இமயமலை மேலே வந்தது.

இந்தச் சான்றுகளை அங்கு ஒப்பிட முடியவில்லை. ஆனால் அவர் தென்னகப் பகுதிகளுக்கு வருகின்றபோது, அந்தச் சிந்து வெளி நாகரிகச்சான்றுகள் இங்குள்ளவற்றிற்குப் பொருத்த மாக இருப்பதைக் கண்டார். தமிழ் வரிவடிவம் அந்தக் கிரந்த எழுத்துக்குப் பொருத்தமாக இருக்கின்றது. அவர்களின் கோயில்களைப் பார்த்தார். அந்தச் செடி கொடிகளைப் பார்த்தார்; மிகவும் நெருங்கியிருப்பது தமிழ்நாட்டு நாகரிகம்தான் என்று அவர்தாம் முதன்முதலில் சான்று காட்டி, மொகஞ்சதாரா, ஆரப்பா நாகரிகம் 'திராவிட நாகரிகம்' என்று எழுதினர்; அதன் பிறகுதான் இந்தத் தென்னாட்டிலிருந்து தமிழ் ஆராய்ச்சி யாளர்களுக்குக் கொஞ்சம் கண் திறந்தது. எனவே இருண்ட வரலாற்றிலே நமக்கு மெழுகுத்திரி போன்ற வெளிச்சத்தைத் தந்தவர் ஆங்கிலேயர்கள்.

இருண்ட வரலாறு என்பது 2000 ஆண்டுக்காலம். இந்த இரண்டாயிரம் ஆண்டுக் காலத்திலே ஓர் ஆயிரம் ஆண்டுக்காலம் களப்பிரர் காலம். அந்தக் காலத்திலே தமிழகத்திலே என்ன நடந்தது என்று எவருக்கும் தெரியாது. 1000 ஆண்டு அல்லது 1200 ஆண்டுக்கால அளவீட்டிலே தமிழகத்தில் மதக்காலமாகும். சமய இலக்கியங்கள் வளர்ந்த காலம். இந்தச் சமய இலக்கியங்கள் வளர்ந்த காலத்திலே 600 ஆண்டுக்காலம் பல்லவர்கள், ஆண்டார்கள். இந்தக் கால அளவீட்டிலே 'நாயக்கர்' ஆட்சிக் காலத்தில் தமிழகம் சிதைந்ததுபோல் வேறு எந்த ஆட்சிக் காலத்திலும் சிதைந்தது கிடையாது. நாயக்கர் ஆட்சிக் காலத்திற்குப் பிறகுதான் ஆங்கிலேயர்கள் வந்தார்கள். இந்த வரலாற்றுத் தெளிவை நமக்கு ஆங்கிலேயர்கள் தாம் தந்தார்கள். எனவேதான் இங்கு இருந்த வரலாற்றுப் பேராசிரியர்களெல்லா ரும் கொஞ்சம் கண் திறந்து பார்த்தார்கள். அவையெல்லாம் உண்மைதானென்று அப்பொழுதுதான் நமக்குத் தெரிந்தது. கழக இலக்கியமெல்லாம் அப்பொழுது தெரிந்திருக்கவில்லை. பின்புதான் பர். உ. வே. சாமிநாதர் போன்றவர்களின் முயற்சி யால் அவை தெரிய வந்தன. இப்பொழுதுகூட, அதைச் சுட்டி, கி. வா. சகநாதன் அவர்கள், தம் ஆசிரியரைப் பெருமைப் படுத்துகின்ற வகையில், 'தமிழ், எங்கள் உ. வே. சா. போட்ட பிச்சை' என்று கூறி வருவதைக் கேட்டிருக்கலாம்.

--(தொடரும்)

தமிழ் உந்தியார்.

(தமிழின் எழுச்சியும், வெற்றியும்)

- பாவலர் இளஞ்சித்திரன்

எழுந்தது வீர இளைஞர் படையே !
எழுந்த தெழுந்ததென் றுந்தீபற;
இயங்கத் தொடங்கிய துந்தீபற.

எங்கள் தமிழர் இணைந்தனர் ; ஒற்றுமைச்
சங்கை முழக்கினர் உந்தீபற:
தாயகம் காத்திட உந்தீபற.

கட்சிகள் வேற்றுமைக் காழ்ப்புகள் தீய்ந்தன !
மட்கி மறைந்தவென் றுந்தீபற;
மானம் விளைந்ததென் றுந்தீபற.

இருந்தன சாதிகள் ; எங்கோ புதையப்
பொருந்தினர் ஒன்றுயென் றுந்தீபற;
புரட்சித் தமிழரென் றுந்தீபற.

பிரிவுகள், பூசல் பிணக்குகள் தீர்ந்து
திரிபுகள் போயின உந்தீபற;
சேர்ந்தார் தமிழரென் றுந்தீபற.

மதவிரி சல்கள் மயக்கம் தெளிந்தார் !
சிதறுவ தில்லைஎன் றுந்தீபற;
செந்தமிழ் மக்களென் றுந்தீபற.

குலங்களின் கோணல் குறுக்கல் அழித்தார் !
கலங்கந் துடைத்தாரென் றுந்தீபற;
களம்விரைந் தாரென றிந்தீபற.

அன்னைத் தமிழ்க்கை யடித்து நடந்தார் !
பின்னைப் பழிமிதித் துந்தீபற.
பெரும்புகழ் வந்ததென் றுந்தீபற!

கொடியை உயர்த்தினர் ! கொள்கை முழக்கம்
இடியென் றெழுந்ததென் றுந்தீபற;
இனிப்பகை தூளென உந்தீபற.

அதிர்ந்த கொம்புகள் ! ஆர்ப்பரிப் பாக
எதிர் நடை போட்டதென் றுந்தீபற.
எக்காளம் இட்டதென் றுந்தீபற.

அணியணி யாய்த்தமிழ் மக்களின் கூட்டம்
துணிந்த துயிர்க்கென்றே உந்தீபற;
தொடர்ந்து போரெல்றே உந்தீபற.

சங்குகள், போர்முர சங்கள் ஒலித்தன;
எங்கணும் எங்கணும் உந்தீபற.
வீழ்ந்ததே இந்திஎன் றுந்தீபற.

வடவனின் ஆணை மடிந்தது மண்ணில்!
வடவரைத் தோள்களென் றுந்திபற;
தமிழரின் தோள்களென் றுந்திபற.

தில்லி பணிந்தது; செந்தமிழ் வென்றது!
அல்லல் தொலைந்ததென் றுந்திபற;
ஆளுமை பெற்றோமென் றுந்திபற.

ஆரியப் பார்ப்பனர் அச்சு முறிந்தது!
வேரினைப் பேர்த்தனர் உந்திபற;
வெற்றித் தமிழரென் றுந்திபற.

ஏழ்மை ஒழிந்ததில் லாமை அகன்றது!
வாழ்வு மலர்ந்ததென் றுந்திபற.
மகிழ்ச்சி மகிழ்ச்சியென் றுந்திபற.

தாய்த்தமிழ் ஆட்சி அரியணை ஏறினள்!
காத்தனள் நம்மைஎன் றுந்திபற.
கவலைகள் இல்லைஎன் றுந்திபற.

பண்டைத் தமிழ்மணம் பாவிப் படர்ந்தது!
தண்டை ஒலிக்கநின் றுந்திபற;
தலைநிமிர்ந் தோமென உந்திபற.

தமிழினில் ஆட்சி! தமிழினில் கல்வி!
தமிழினில் எல்லாமென் றுந்திபற;
தன்மதிப் போங்கிய துந்திபற.

உலகம் மதிக்க உயர்ந்த துயர்ந்த(து)
உலகில் தமிழ்நிலம் உந்திபற;
உருப்பட்டு நின்றதென் றுந்திபற.

இந்தியத் தேசியமும் திராவிட தேசியமும்

0 இந்தியத் தேசியமும் மாயை! திராவிடத் தேசியமும் மாயை! தமிழ்த் தேசியந்தான் மெய்யானது! எனவே தமிழக இளைஞர்கள் இந்திய, திராவிட மாயைகளிலிருந்து விடுபட்டுத் தமிழ்த் தேசிய இன விடுதலைக்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்பதை ஆயிரக்கணக்கான வரலாற்றுச் சான்றுகளுடன் தம் நுண்மாண் நுழைபுலத்தால் விளக்குகிறார் இதன் ஆசிரியர்-
பேரறிஞர் குணா.

420 பக்கங்கள். விலை: உருபா 25. சலுகைவிலை உரு. 20

தாமரை கலை இலக்கிய மன்றம்

16, சபாபதி தெரு, (காமராசர் சாலை குறுக்கு) பெங்களூர்-1

தேசியம், அனைத்துலகியம், பாட்டாளி வகுப்புத் தலைமை!

—குணா.

தேசியம், சர்வதேசியம் மற்றும் பாட்டாளி வகுப்பின் தலைமை - குணாவின் 'வல்லரசு எதிர்ப்புக் கடன்' கட்டுரை பற்றிய சில கருத்துகள் ('மார்க்சியம் இன்று' இதழ் மே-திசம்பர் 1985) என்னும் தலைப்பில் எழுதப்பெற்றுள்ள கட்டுரையை ஒரு நேரிய திறனாய்வு எனச் சொல்ல முடியாது. அனைத்துலகியத்தைப் பற்றி எம் போன்றோர் கொண்டுள்ள கருத்தைத் திறம்பட எதிரொளிக்கிற (reflect) ஒரு கண்ணாடி அஃது இல்லை. முன்னால் நிற்கிற ஓர் உருவத்தை நூற்றுக்கு நூறு அப்படியே எதிரொளிக்க வல்ல கண்ணாடி எதுவும் இல்லை. ஓரளவாவது கோணலும் குறையும் அமுக்கமும் நீட்டமும் அதனுடைய எதிரொளிப்பில் இருக்கத்தான் செய்யும். ஒரு கண்ணாடியின் மேற்பரப்பு எவ்வளவுதான் நல்ல சம மட்டமாக இருப்பினும், அத்தகைய குறை கடுகளவாவது இருக்கத்தான் செய்யும். அக்கண்ணாடி ஒரு குவிந்த கண்ணாடியாகவோ குழிந்த கண்ணாடியாகவோ இருந்துவிட்டால், அதனுடைய எதிரொளிப்பில் இருக்கிற உருத்திரிபுகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இது கண்ணாடிகளுக்கு இயல்பான ஒரு தன்மை.

கருத்துகளும் கூட அது போன்ற எதிரொளிப்புகள்தாம்; திறனாய்வுக் கருத்துகளும்கூட அத்தகையனவே. இந்நிலையில், வல்லரசு எதிர்ப்புக் கடன் என்னும் என்னுடைய கட்டுரையைக் கொண்டு போய் ஒரு குழிந்த அல்லது குவிந்த கண்ணாடி போன்ற ஒரு பார்வை நிலையின் முன்னால் நிறுத்தினால் எத்தகைய எதிரொளிப்புத்தான் இருக்கும் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஒரு கருத்தினுடைய ஒரு கூறை மட்டுமே எடுத்துக் கொண்டு அந்தப் பகுதியை ஒருதலையாக நீட்டினால் என்னவாகும்? ஒரு தனிக் கட்டுரையின் ஒரு பகுதியை மட்டுமே வைத்துக் கொண்டு ஒருவருடைய அனைத்துலகியத்தை முழும் போட்டுச் சரியாக அளக்க முடியுமா? இதனால் கோணல்மாணலான ஒரு தோற்றம்தான் மிஞ்சும். இந்த கோலத்தில்தான் அந்தத் திறனாய்வுக் கட்டுரையும் இருக்கிறது.

பின்புலம்:

குறையே இல்லாத எழுத்து இல்லை. முற்றான முழு நிறைவு யாருடைய எழுத்திலும் இருக்க முடியாது. எதையும் எழுதப்பட்ட சூழலுடன் வைத்துத்தான் அலச வேண்டும்.

என்னுடைய கட்டுரை ஒரு குறிப்பிட்ட சூழலில் எழுதப்பெற்றது. இதுவே அதன் பின்புலம். என்ன அந்தப் பின்புலம்?

நேற்று இங்கு ஒண்ட வந்த மாற்று நாட்டான் ஒரு மார்வாடி. அவன் எம் நாட்டையும் காணியையும் உரிமையை

யும் அன்றிருந்த ஆங்கிலேய வல்லரசுடன் கூடிக்குலவி விலை கொடுத்து வாங்கிக் கொண்டவன். அவனிடம் தன்னுடைய காணியையே பறிகொடுத்துவிட்டுக் கோவணாண்டியாகப் போய்விட்ட தமிழன் ஒருவன், கடைசி யாமத்தில் கோழி கூவியவுடன் தன்னிடம் எஞ்சிய கலப்பையை எடுத்துக் கொண்டு புறப்பட்டானாம். வழியில் வந்த அத்தை மகன் அவனைப் பார்த்து "இந்தக் கலப்பையை வைத்துக் கொண்டு எங்கு போய் உழுவாய்?" எனக் கேட்டானாம். அதற்கு அக் கோவணாண்டி தன்னுடைய கையை வானுயர உயர்த்திக் காட்டி ஆட்டி: "யாதும் கழனியே! யாவரும் கேளிரே!" என்று வெற்றுரை பேசினானாம். இதை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த மார்வாடியின் அடியாள் வந்து அவனை அப்படியே கட்டியணைத்துக் கொண்டு "என்னே மாந்த நேயம்! என்னே விரிந்த உலக உணர்வு!" எனச் சொல்லி முத்தி மகிழ்ந்தானாம். இந்த இளித்தவாய்த் தமிழினத்தின் கதை இப்படி. இந்த நிலையில், இங்கொன்றும் அங்கொன்றுமாக முளைத்துவிட்ட "முற்போக்குகள்" வேறு இங்கு வந்து வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுகின்ற கயமையைப் பார்க்கவே கண் கூசுகிறது.

சொந்த மொழியையும் நாட்டையும் மறந்து, இனமானத்தையும் தன்னுரிமையையும் விலை பேசுகிற "முற்போக்குகள்" பலர் தமிழினத்தில் உண்டு. தம் நாட்டையும் இனத்தையும் அடிமைப்படுத்தி வைத்துள்ள மாற்றான் வார்க்கிற புதிய பார்ப்பனியப் "பாரதக்" கொள்கையை உச்சிக்கேறும் வரை குடித்துவிட்டு மயங்கிக் கெட்டுக் கிடக்கிற "புரட்சிகளும்" உண்டு. நாட்டைக் காட்டிக் கொடுக்கின்ற கயவர்களாகவும் அய்ந்தாம் படையினராகவும் இவர்கள் இருப்பது ஊருக்குத் தெரியும். இந்நிலையில், இவர்களை மீட்கப் பார்த்தவர்கள் எல்லாம் இதுவரை தோற்றனர். ஒடுக்குண்ட நாடுகளுக்குத் தனி நாட்டுரிமை என்னும் இலெனினியக் கொள்கையைப் பற்றி இவர்களுக்குப் படித்துப் படித்துச் சொன்னோம். காது கொடுத்துக் கேட்கவில்லை. "இலெனினியப் பார்வையில் இந்தியா ஒரு தேசமன்று; 'இந்தியத் தேசிய இனம்' என ஒன்றில்லை; தமிழகம் ஒரு தனிநாடு; தமிழர்கள் ஒரு தனித் தேசிய இனம்" என்றெல்லாம் சொல்லிச் சொல்லித் தொண்டை வரண்டதுதான் மிச்சம். "இது பிரிவினை எனப்படும் 'வாதம்'. 'வருக்க'ப் பார்வையும் 'வருக்க'ப் போராட்டமுந்தாம் ஒரே வழி. தமிழினமென்றும் தமிழக விடுதலையென்றும் பேசுவதெல்லாம் கடைந்தெடுத்த இனவெறி" என்று வரட்டிய வாய்பாடுகளை "முற்போக்குகளும் புரட்சிகளும்" வாரி இறைத்ததைப் பார்த்தோம்.

"வலது" "இடது" எனத் தங்களை வகுத்துக் கொண்டுள்ள "பாரதப்" பொதுவுடைமையர் ஒரு பக்கம். அவர்கள் தமிழினத்தைப் பச்சையாகக் காட்டிக் கொடுக்கின்ற பார்ப்

பனிய முதலாளியத்தின் தரகர்கள், ஆனால், புரட்சிக்கு இலக்கணம் காட்டுகின்ற 'மீத்தீவிர'ங்களாவது நிலன்-பொழுது (Space-Time) என்னும் இணைகளைக் கற்றுப் புரட்சியின் வரம்பும் வாய்ப்பும் அறிந்தார்களா? இல்லையே. தங்களுக்கென ஒரு நாடோ தேசமோ இல்லாத இவர்கள் புரட்சி செய்யப் போவதாகத் தோள் தட்டி வருகின்றனர். மொழியின் மீது பற்று இல்லாத ஒருவர் நாட்டின் மீது பற்றுக் காட்ட முடியாது. நாட்டன்பில்லாத எவரும் ஒரு புரட்சியைச் செய்ய முடியாது. இந்த உண்மையை இவர்கள் உணரவில்லை. புரட்சியின் வரம்பையும் வாய்ப்பையும் அறியாத நாடோடிகளெல்லாம் "இந்தியா ஒட்டுக்காகத்தான் புரட்சி செய்வோம்" என வீரார்ப்புப் பேசுகின்றனர். இந்தியாவோடு மட்டுமே ஏன் நின்றுவிட வேண்டும்? உலகளவிலேயே அதை ஒட்டுக்காகச் செய்யட்டுமே! கையாலாகாதவர்கள் வானத்தில் வெறுங்கையில் முழம் போடுவதைப் பார்த்த தமிழக மக்கள் இந்த "முற்போக்கு"களையும் "புரட்சி"களையும் ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. வேறு வழியின்றி இன்று பாலாறுகப் போய்விட்ட திராவிட நீரோட்டங்களின் மணல் விரிப்புகளில் தோண்டிய கேணிகளை நம்பி வயிற்றைக் கழுவி வருகின்றனர்.

இப்"புரட்சி"களில் ஒரு பிரிவினர் காலம் தாழ்த்தியாவது தாங்கள் தமிழக விடுதலை என்னும் வழியை ஏற்றுக் கொள்கிறோம் என்றனர். நம்பிக்கையுடன் இவர்களைப் பார்த்தோம். ஓர் அனைத்திந்திய ஆட்சியின் தலைமை இருந்தால்தான் புரட்சி என்று இதுவரை சொல்லி வந்தவர்களின் நிலையிலிருந்து விலகிப் பல் வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த கட்சிகளுக்கிடையில் ஒரு வகை இணைப்பு உறவு இருக்கலாமெனப் பாடம் படித்த இவர்களை வரவேற்றோம். ஆனால், தமிழக விடுதலையென்னும் நோக்கத்தை இந்தியப் புரட்சிக்கான ஒரு "போர்த் தந்திரமாக"* மட்டுமே இவர்கள் பார்க்கின்றனர். அஃதாவது, தமிழர்களின் மீதான தேசிய இன ஒடுக்கலை ஒழிக்க வல்ல தனிநாட்டுரிமைக் கோரிக்கையை ஆதரிப்பதுபோல் ஆதரித்து, நடித்து, அணைத்துக் கெடுத்து இவர்கள் தமிழினத்தின் முகத்தில் கரியைப் பூசப் பார்க்கின்றனர். விடுதலை உணர்வுடைய தமிழ் நெஞ்சங்களில் இதனால் இவர்களாலும் கால்கொள்ள முடியவில்லை.

குறுங்குறுங் குழுக்களாகப் பிரிந்து கிடக்கிற "புரட்சி"யின் இப்பங்காளிகளில் சிந்திக்க வல்லவர்களிடம் போய் நாம் "இந்திய ஒருமைப்பாடு", "ஒரேகால இந்தியப் புரட்சி" போன்ற கூற்றுகள் யாவும் புதிய பார்ப்பனியத்தின் பொய்மான்கள் எனச் சொல்லிப் பார்த்தோம், கேட்கவில்லை. டிராட்சுக்கியம் கடைவிரித்த "ஒட்டுக்கான உலகப் புரட்சி"யென்னும்

* செயல் உத்தி (Tactic) என நாமே இதைத் திருத்திக் கொள்வோம்.

குழப்படியின் கூறுதான், அக் கூற்றுகளின் உள்ளீடாகவும் கருவாகவும் இருப்பதாகச் சொல்லிப் பார்த்தோம். பலனில்லை; ஒட்டுக்கான ஓரிந்தியப் புரட்சி என்னும் எதிர்ப்புரட்சிக் கொள்கையைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, சொந்த நாட்டையும் இனத்தையும் காட்டிக் கொடுத்துக் கொண்டு, ஒப்பாரி வைத்து வருகிற ''புரட்சி''களைத் திருத்தப் போய் முடியாமல் போன நிலையில் என்னுடைய மேற்சொன்ன கட்டுரை எழுதப்பட்டது. நாடே இல்லையென்பவன் தன் நாட்டையும் இனத்தையும் காட்டிக் கொடுத்துவிட்டுத் தன்னுடைய சூழலுடன் ஒட்டாது, ஒருதலையாக ''உலகம், உலகம்'' எனப் பொய்யாக அரற்றிக் கொண்டிருக்கிற சூழலில், உண்மையான அனைத்துலகியம் யாதாக இருக்குமெனத் தேடப் புறப்பட்டோம். அப்போது அறிவுக்கு விளங்கிய கருத்துகளை கருதுகோள்களாக முன்வைக்க முயன்றதால் வந்ததுதான் என்னுடைய கட்டுரை.

வீட்டுக்கு எதிர்மறை ஊர். ஊருக்கு எதிர்மறை நாடு. நாட்டுக்கு எதிர்மறை உலகம். இவையாவும் ஒன்றையொன்று நிறைவு செய்வன. ஒன்று மற்றொன்றாகத் திரிய வல்லன. நாட்டன்பு என்பது உலகை வெறுப்பதாகாது. உலகநேயம் நாட்டைக் காட்டிக் கொடுப்பதும் ஆகாது. ''தேசியம்'' என்னும் போக்கைப் பற்றி இலெனின் தொடக்கத்தில் கொண்டிருந்த கருத்துக்கும் பின்னர் சொல்லிய கருத்துகளுக்கும் இடையில் ஒரு முரணிய வளர்ச்சியைப் பார்க்கலாம். மேலை ஐரோப்பிய நாடுகளில் ''ஒட்டுக்காகப் புரட்சி செய்யவேண்டும்'', என்னும் பழைய நிலை இதனால் மாறியது ''ஒரு நாட்டில் புரட்சி'' என்னும் இலெனினின் நிலைப்பாடு ஓங்கியது. அக் கருத்து கிழக்கு நோக்கிப் பெயர்ந்து இன்னும் தெளிவான ஒரு தனித்தன்மையைப் பெற்றுள்ளது. இஃதெல்லாம் தெரிந்தோ தெரியாமலோ இந்தியாவில் மட்டும் புரட்சி ஒட்டுக்காகத்தான் இருக்குமெனப் ''புரட்சி''கள் அடம் பிடித்து வருகின்றன.

வகுப்பு (வருக்கம்) என்னும் திணையை மட்டுமே வைத்துக் கொண்டு மேலை ஐரோப்பாவில் உருவெடுத்த மரபு மார்க்சியத்தின் அடிப்படையில் பாட்டாளி வகுப்பு முதலாளிய வகுப்பைத் தூக்கி எறிய வல்ல ஓர் அப்பழுக்கற்ற ''தூய வகுப்புப் புரட்சி'' நடந்து முடிந்த ஒரு நாட்டையும் கூடக் காட்ட முடியாது. பன்னாட்டின உருசியாவில் தேசிய இனங்களின் தனிநாட்டுரிமையையும் தனித்தன்மையையும் விளங்கிக் கொண்ட போதுதான் ஒடுக்குண்ட தேசிய இனங்களையும் உள்ளிட்ட ஒரு கூட்டுப் புரட்சி வெற்றி பெற முடிந்தது. இரண்டு உள்நாட்டு உழவர் புரட்சிகளின் போது அவ்வளவாகப் பெருகி வளர முடியாத சீனப் புரட்சி, சப்பானை எதிர்த்த நாடு மீட்புப் போரின்போது தேசியத் தன்மைகளைப் பெற்றது. அப்போதுதான் அகன்று ஆழ்ந்து வளர்ந்தது. அத்தேசியத் தன்மையில் அனைத்துலகியக் கூறு இருப்பினும், அத்தேசியத் தன்மையின் வாயிலாகத்தான்

அவ்வுலகத் தன்மையை உலகுக்கு வெளிப்படுத்த முடிந்தது. இத்தகைய தேசிய வெளிப்பாடுதான் வியத்நாமியப் புரட்சியின் வெற்றிக்குக் காரணமாகியது. இந்நிலையில், முதலாம் உலகப் போருக்கு முன்பிருந்த முதலாளியத் தேசியமாக எல்லாத் தேசியங்களையும் பார்க்காமல் பாட்டாளிய நலன்களின் தலைமையிலான வல்லரசு எதிர்ப்புத் தேசியமாகவும் கூட அது வளர முடியுமென்னும் புதிய விளக்கம் பிறந்தது. இத்தகைய சூழலில் ஒடுக்குண்ட ஒரு நாட்டின் தேசியத்தை அனைத்துலகியத்திற்கு எதிராக நிறுத்தக் கூடாது. ஒன்றையொன்று வெட்டிச் சாய்க்கிற பகை நிலையில் நிறுத்தாமல், அவ்விரண்டும் ஒன்று மற்றொன்றுவதையும் ஒன்றையொன்று நிறைவு செய்வதையும் விளங்கிக் கொள்ளவேண்டும். இந்தக் கருத்தை விளக்குவதற்காகத்தான் ஒரு தேசிய வரம்புக்குள் அனைத்துலகியக் கடமையை செய்து முடிக்க முடியுமென்னும் இலெனினினுடைய கருத்தை நான் மெற்கோளாகக் காட்டவேண்டி வந்தது.

அனைத்துலக மென்னும் சாக்கில் தமிழகத்தின் தனித் தன்மையையும் தனி முரண்பாடுகளையும் முற்றுப் புறக்கணித்துவிட்டுச் சொந்த மொழியையும் சொந்த இனத்தையும் காட்டிக் கொடுத்துக் கொண்டு வருகிறவர்களின் நிலையைத் திருத்தவோ இடித்துரைக்கவோ பார்க்கிறோம். இதனால் தமிழகத்திற்கான விடுதலைப் போராட்டத்தின் தேவையை வலியுறுத்தி எழுதும் போதும் பேசும் போதும் சில இடங்களில் கூடுதல் அழுத்தம் தரப்படுவது இயல்புதான். சில இடங்களிலும் நேரங்களிலும் மிகையாக்கமும் இருக்கலாம். அத்தகைய அழுத்தத்தைச் சிலர் தமக்கு வேண்டிய வகையில் ஒருதலையாக நீட்டிப்பது அறிவு நெறிககேற்ற வழக்குரையாக இருக்க முடியாது. அஃது அடாவடியாகத்தான் இருக்கமுடியும்.

இங்கு இடப் பொருத்தம் இருக்கிறதோ இல்லையோ, எதையும் திரித்துப் புரட்ட முடியுமென்பதை இங்கு ஓர் எடுத்துக்காட்டைக் கொண்டு மெய்ப்பிக்க முயல்வோம். ''தன்னுரிமையைப் பிளக்க முடியாது'' (Freedom is indivisible) என்னும் மார்க்சினுடைய விளக்கத்தைப் பற்றிச் சில நாள்களுக்கு முன்னர் அக் கட்டுரையாசிரியர் எனக்கு ஒரு மடல் எழுதியிருந்தார். தொழிலாளர் வகுப்பு தன்னைத் தானே விடுவித்துக் கொள்வதோடு நில்லாமல், தன்னைக் கூலி அடிமைத்தளத்தில் அடக்கி வைத்துள்ள ஆண்டையாகிய முதலாளிய வகுப்பையும் கூட விடுவிக்கிறது. தமமுடைய இந்தக் கருத்தை விரித்துரைக்கையில், தொழிலாளிக்கு விடுதலையின்றி முதலாளிக்கு விடுதலை இல்லை; தொழிலாளிக்கு அடிமை விலங்கு என்றால் முதலாளிக்கும் கூட அடிமை விலங்குதான்; இதனால், ஆண்டைக்கும் அடிமைக்கும் இடையிலான உறவில் தன்னுரிமையைப் பிளக்கமுடியாது என்று மார்க்சு விளக்க வேண்டி வந்தது இந்தக் கூற்றை அக் கட்டுரையாசிரியர் அந்த மடலில் சுட்டிக் காட்டிவிட்டு,

பார்ப்பனரையும் பார்ப்பனியத்தையும் இனியும் கண்டபடி சாடாமல் ஒரு நோயாளியின் நோயை ஒரு மருத்துவர் ஆற்றுவதைப் போல் பார்ப்பனர்களையும் அணுக வேண்டுமென்றும் பொருளைச் சுட்டியிருந்தார். அஃதாவது, பார்ப்பனக் குமுகம் ஒரு பெருநோய் பிடித்த குமுகம். அஃது ஓர் உளநோய் வட்டம். பார்ப்பனியம் என்னும் நச்சுவட்டத்திலிருந்து பார்ப்பனர்கள் தம்மைத்தாமே விடுவித்துக் கொள்ள முடியாது. இந்த உள-நோய் வட்டத்திலிருந்து அவர்களைப் பறையரும் பள்ளருந்தாம் விடுவிக்கவேண்டும். கடுமையும் வன்மையும் இன்றி இந்நிலையைப் பார்ப்பனருக்கு மெல்ல உணர்த்திட வேண்டும் என்பதே அம்மடலின் உள்ளீடு.

"தன்னுரிமையைப் பிளக்க முடியாது" என்னும் மார்க்சினுடைய கூற்றை வைத்துக் கொண்டு பார்ப்பனிய எதிர்ப்பை மட்டுப்படுத்தப் பார்ப்பது போன்ற மயக்கத்தைக் கட்டுரையாசிரியரின் கூற்று தோற்றுவிக்கிறது இந்தக் கருத்து மயக்கத்தை வைத்து அவரின் கருத்தின் மீது சிலவற்றை ஏற்றிச் சொல்லி பின்வருமாறு திரித்துக் கூற முடியும் :

1) தொழிலாளி ஒருவர் பெரிய முதலாளி ஒருவரிடம் போய், "தொழிலாளிக்கு விடுதலையின்றி முதலாளிக்கு விடுதலையில்லை. ஏனெனில், விடுதலையைப் பிளக்க முடியாது. முதலாளிகள் கொடிய முதலாளிய உறவுகளிலிருந்து தங்களைத் தாங்களே விடுவித்துக் கொள்ள முடியாது. தொழிலாளராகிய நாங்கள்-தாம் முதலாளிகளாகிய உங்களையும் சேர்த்து விடுவிப்போம். இதனால், முதலாளிய உறவுகளை ஒழித்துக் கட்ட முதலாளிகளும்கூட முன்வரவேண்டும்," எனச் சொன்னால் எந்த முதலாளி தான் செவி கொடுத்துக் கேட்பான்?

"தன்னுரிமையை பிளக்க முடியாது" என்னும் உண்மை விளங்க வேண்டுமாயின், முதலாளியர் என்னும் குமுகத் தகுதியிலிருந்து முதலாளியரை ஒரு வகுப்பாக வைத்து முதலில் தூக்கியெறிய வேண்டும். அஃதாவது, பாட்டாளிய வகுப்பு தனனுடைய அரசியல் அதிகாரத்தைப் புரட்சி வாயிலாக நிறுவ வேண்டும். முதலாளிய ஆட்சியைத் தூக்கியெறிவதென்னும் ஓர் இடைநிலையோ புரட்சி இயங்கியலுக்கு இன்றியமையாதது.

பார்ப்பனர் எதிர்ப்பைப் பற்றி விளக்கிச் சொல்ல "தன்னுரிமையைப் பிளக்க முடியாது" என்னும் மார்க்சினுடைய கூற்றை ஆசிரியர் துணைக்கு அழைப்பதை இவ்வாறு எளிதாகக் கொச்சைப்படுத்த முடியும். வன்முறைப் புரட்சியின்றி அற-வழியிலேயே முதலாளியத்தை ஒழித்துவிட முடியுமென ஆசிரியர் சொல்கிறார் என்று திரித்துச் சொல்ல முடியும்.

2) "தன்னுரிமையைப் பிளக்க முடியாது" என்னும் கருதுகோளைப் பற்றி கட்டுரையாசிரியரின் நிலையைத் தமிழீழ தேசிய விடுதலைப் போரின் மீதும் ஏற்றிச் சொல்லிக் குழப்ப முடியும்.

சிங்கள தேசிய இனம் இலங்கைத் தீவின் ஆண்டைத் தேசிய இனம். தமிழீழத் தமிழினமோ அச்சிங்களத் தேசிய இனத்தால் ஆளப்பட்டு வருகிற தேசிய இனம். இந்த நிலையில், சிங்களத் தொழிலாளியையும் தமிழ்த் தொழிலாளியையும் ஒரே தட்டில் ஒரே மட்டத்தில் நிறுத்த முடியாது. தமிழீழத் தமிழன் ஒருவன் சிங்களத் தொழிலாளி ஒருவனிடம் போய், "எனக்கு ஒரு விலங்கு என்றால் உனக்கும் ஒரு விலங்கு. இதனால், சிங்களர்களைத் தமிழர்கள்தாம் இன்றைய முதலாளிய அடிமைத் தளைகளிலிருந்து மீட்கப் போகின்ற மீட்பர்கள்" என்றால் எந்தச் சிங்களன்தான் ஏற்றுக் கொள்வான?

இந்தத் தேசிய இனச் சிக்கலை இவ்வாறு பேசி மட்டுமே தீர்க்க முடியாது. சிங்களத் தேசிய இனத்திற்கு இருக்கிற ஆண்டைத் தேசிய இனமென்னும் தகுதியைத் தன்னுடைய தேசிய விடுதலைப் போராட்டத்தின் வாயிலாகத் தமிழீழத் தமிழினம் முதலில் தூக்கியெறிய வேண்டும். அப்போது சிங்களனுக்கும் ஒரு விலங்கு, தமிழனுக்கும் ஒரு விலங்கு என்னும் சமநிலை தோன்றும். இவ்வாறு செய்வதன் வாயிலாகத்தான் "தன்னுரிமையைப் பிளக்க முடியாது" என்னும் சார்பு உண்மையை இத்துறையில் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும்.

இந்நிலையில், சிங்களத் தொழிலாளியும் தமிழ்த் தொழிலாளியும் இனமெனப் பாராமல் ஒன்று சேர்ந்து வகுப்பு அடிப்படையில் ஒட்டுக்காகப் போராட வேண்டுமெனச் சொல்லித் தமிழீழத் தேசிய விடுதலையின் தேவையை ஆசிரியர் எதிர்க்கிறாரெனச் சொல்லிப் புரட்ட முடியாதா என்ன?

3) அதே போன்று, பார்ப்பான் ஒருவனைப் பார்த்துப் பறையன் ஒருவன், "எனக்கு விடுதலை வந்தால்தான் உனக்கு விடுதலை; ஏனெனில், "தன்னுரிமையைப் பிளக்க முடியாது" பறையராகிய நாங்கள் எங்களை நாங்களே விடுவித்துக் கொள்வதோடு பார்ப்பனராகிய உங்களையும் கூட விடுவிப்போம். நாங்கள்-தாம் உங்களுடைய மீட்பர்கள்" என்று பாடம் படித்துக் கொண்டிருந்தால் மட்டும் சாதியம் ஒழிந்துவிடுமா?

ஆண்டைச் சாதி மேலாவித்தனமும் சாதி வாழ்க்கைத் திணையும் ஆகிய பார்ப்பனியத்தைத் தூக்கியெறிவதென்னும் சாதி எதிர்ப்புக் கடமை உள்ளடங்கிய வகுப்புப் போராட்டம் என்பது ஓர் இடைநிலை. இதைப் புரிந்து கொள்ளாமல் தன்னுரிமையைப் பற்றிக் கட்டுரையாசிரியரின் கருத்தைக் கொச்சைப் படுத்த முடியும். அத்தகைய இடைநிலையினறிப் பார்ப்பனரையெல்லாம் பேசியே திருத்திப் பார்ப்பனியத்தைப் பார்ப்பனர்கள் யாவரும் தாங்களாகவே

கைவிடச் செய்ய முடியுமென அவர் சொல்வது புரட்சியின் இயங்சியலுக்கு முரணானது என்று சொல்லி அவருடைய நிலையைக் கொச்சைப் படுத்தலாம்.

தன்னுரிமையைப் பற்றிய ஆசிரியரின் கருத்தை ஆக்கமுறையில் திறனாய்வதுதான் அறிவு நேர்மை. அதை விட்டுவிட்டுக் கருத்தில் அவருடன் முரண்படுவதனால் அவர் புரட்சியென்னும் பாய்ச்சல் நிலையை மறுக்கிற "புரட்டல்காரர்" எனச் சொல்லி அவரைக் கொச்சைப்படுத்தலாமா? 'பார்ப்பனியத்தின் ஊதுகுழல்' என அவரைப் பழித்துரைக்கலாமா? அவ்வாறு செய்வது திணையைப் பனையாக்குகிற அடாவடிப் பேச்சாகத்தானே இருக்கும்? இது போன்ற வேலைகளை நாம் செய்ய மாட்டோம். அதே போன்று அனைத்துலகியத்தைப் பற்றிச் சரியான புரிதலின்றி வரட்டுத்தனமாக விளங்கிக் கொள்வதைச் சுட்டிக் காட்டுபவரை ஓர் இனவெறியராகக் காட்டுவது எங்ஙனம் சரியாகும்? எனவே "இனவெறியர்" முத்திரையையோ "முதலாளியத் தேசியர்" பட்டத்தையோ தராமல் எம் போன்றோரின் எதிரொளிப்பிலான குறைகளை அளவறிந்து சொல்லும் முறையறிந்து செய்திருக்கலாம். இவ்வாறு செய்யாததற்குக் காரணமில்லாமல் இருக்கமுடியாது.

அடாவடிப் பேச்சுத்தானே?

புரட்சியின் தலைமையைப் பற்றி என்னுடைய கட்டுரையில் வருகிற கருத்துகளின் மீது நான்கு கேள்விகளை ஆசிரியர் தொடுக்கின்றார். உலக முதலாளியம் தன்னுடைய அறிவிலிருந்து தன்னைத்தானே காத்துக் கொள்வதற்காக முதலாளிய ஆக்க உறவுகளை மீண்டும் எப்படிப் புதுப்பித்துக் கொள்கிறது என்பதை அவர் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட என்னுடைய கட்டுரை குறிப்பிடுகிறது. முதலாளிய உறவுகளுடைய மீட்சியின் காரணமாக உலக முதலாளியம் தொழிலாளர் வகுப்பிடம் ஏற்படுத்தியுள்ள "அக வறுமை"யையும் கையறு நிலையையும் அடுத்து விளக்குகிறது. (தொடரும்)

இதழ் விற்கும் முகவர்கள், அன்பர்கள் கவனத்திற்கு!

தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆகிய இதழ்களை விற்பனை செய்யும் முகவர்களாலும் அன்பர்களாலும் நாம் படும் தொல்லைகளுக்கும், அடையும் இழப்புகளுக்கும் அளவில்லை. பலர் நிறைய நிலுவை வைத்திருக்கிறார்கள். சிலர் ஏமாற்றும் நோக்கத்துடன் தொகை விடுக்காமலும், எழுதும் நினைவூட்டு மடல்களைப் பொருட்படுத்தாமலும் உள்ளார்கள். இந்த மாத இறுதிக்குள் அவர்கள் தம்தம் நிலுவைகளை எச்சமின்றி விடுத்துக் கணக்கைச் சரிசெய்து கொள்ளவில்லையானால், அடுத்த மாதத் தொடக்கம் முதல் கட்டாயம் இதழ்கள் விடுப்பது நிறுத்தப் பெறுவதுடன் சட்டப்படியான நடவடிக்கைகளும் எடுக்கப்பெறும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். -அமைச்சர்.

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)
முடிவு **தனித்தமிழ்நாடு** ஒன்றே என்பது எங்களது முடிவு முட்டி மோதியாகிலும் தனித்தமிழ் நாட்டைப் பெற்றே தீர வேண்டும். அதற்குப் படையமைத்து செயல் மேற்கொள்வோம்.

தாங்கள் சீருடனும், சிறப்புடனும் வாழ்ந்து தனித்தமிழ் நாட்டைப் பெற்றுத் தமிழர்களை ஒன்றுபடுத்த எங்கள் தமிழ் வாழ்த்துகள். தமிழ்தான் நமக்குத்துணை, அன்புநிறை

—தனித்தமிழன்பனர். சுங்கை, மலேசியா.

1195: பெருமதிப்பிற்கும் அன்பிற்கும் இனிய ஐயா அவர்களுக்கு என் பணிவான வணக்கங்கள். ஐயா, **தமிழ்நிலம்** கிழமை இதழ் என அதில் குறித்திருக்கிறது. ஆனால் கிழமை தோறும் கிடைப்பதில்லை. நான **தமிழ்நிலம்** இதழுக்காக அன்றாடம் கடைக்குச் சென்று 'வந்து விட்டதா?' எனக் கேட்டுக் கடைக்காரரைத் தொல்லை செய்கிறேன். ஏன் ஐயா கிழமைதோறும் சரியாகக் கிடைப்பதில்லை. ஒவ்வொரு திங்களும் மூன்று இதழ்களையும் கையில் பெற்றவுடன் நான் எல்லையில்லா இன்பம் அடைகிறேன். மலேசியாவிலிருந்து ஓர் அன்பர் எழுதியிருந்த மடலைப் படித்து விட்டு நான் மிக்க மகிழ்ச்சியுற்றேன். அவருடைய கருத்துகள் நூற்றுக்கு நூறு சரியானதும் போற்றத் தக்கதுமாக இருந்தன. அவர் எழுதியிருந்தது போல் நாம் எழுதிக் கொண்டு மட்டும் இருந்தால் நாம் வெற்றியடைய முடியாது. நாம் போராடினால்தான் நமக்கு வெற்றி கிட்டும். நாம் இத் தலைமுறையிலேயே நாட்டை வாங்கினால்தான் வாங்க முடியும். நாம் இத் தலைமுறையையும் கடத்தி விட்டோமானால் எப்பொழுதுமே வாங்க முடியாமல் போனாலும் போகலாம். அதனால் இப்பொழுதே போராட வேண்டுமென எண்ணுகிறேன்.

உ. த. மு. க நடத்தும் தீர்மானக் கருத்தரங்கைப் பற்றிப் போன திங்கள் தென்மொழியின் மூலம் விளக்கமா அறிந்தேன். அது நடைகப் போவதைப் பற்றி எண்ணி மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அக்கருத்தரங்கிற்கு என்னாலியன்ற பொருளுதவி செய்ய எண்ணிச் சிறு தொகை அனுப்பியுள்ளேன். இதைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். —**ச. சாகிர்**, சென்னை.

1196: அன்பின் இனியீர்! அறிவு கெழுமிய **'தென்மொழி'** குடும்பக் குழாமினர் அனைவருக்கும் என் அன்பான வணக்கம். ஐயா, ஒன்று முகாமையாகக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். கடைசியாகக் கிடைக்கப் பெற்ற **தென்மொழி**(சுவடி 22; ஓலை 11) யின் அட்டைப் படம் மிகமிக நன்றாகப் பாடலுக்குப் பொருந்துமாறு அமைந்திருந்தது பாராட்டிற்குரித்து. எல்லா இதழ்களிலும் வணிக நோக்கிலான 'கோணல் கவர்ச்சி' தென்படுகிறது. ஆனால் நம் இதழிலோ வணிக நோக்கற்ற, வாழ்வியல் நோக்கிலான

அறிவுக் கவர்ச்சி தென்படுகிறது. பொருளியல் சிறிது 'தென்மொழ'க் குழாமிற்கு மேம்படுமானால் இதழ்கள் இன்னும் சிறப்பாக அமையும என்பதில் ஐயமில்லை! முயற்சி செய்வோம் எனக் கூறி, திசபர் மாதம் நடைபெறும் நம் தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கில் இயன்றால் கண்டிப்பாகக் கலந்து கொள்வேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவண் தங்கள் உண்மையுள்ள, த. வேலுச்சாமி, பொங்கே கவுண்டன் புதூர்.

1197. பெருமதிப்பிற்குரிய அய்யா அவர்களுக்கு வணக்கம். தென்மொழி சுவடி 22 ஓலை 12 இதழினை நோக்க தி. மு. க. நடத்தும் இந்தியெதிர்ப்புக் கிளர்ச்சி என்னும் விளக்கமான ஆய்வுப் பகுதி சிந்தனை தழைத்தெழுந்த கருத்துக் கணிப்பாக அமைந்திருந்தது. எவரும் எந்தப் போக்கிலும் இரண்டகம் கொண்டே தமிழரிடத்து நஞ்சு விதைத்திடப் பார்க்கிறார். எச்சரிக்கை என்பதை விடுத்தும் அனைவர் செவிசாய்த்தார் இல்லை. இப்பொழுதோ எதிர்ப்புறத்தே வந்துள்ளனர் எட்டப்பர்கள்.

தாய்மொழியுணர்வைக் கொள்ளாதார் பிறப்பின் நிலைக்குள் நெகிழ்ச்சிப் பட்டிருப்பர் என்றே ஐயுறத் தோன்றுகிறது. சிறைச்சாலைக்குள் அடைத்திட்டால் மொழிக்கிளர்ச்சி அடங்கிவிடுமென்பது ஆள்வோரின் எண்ணம். ஆயின் இன்று அவை எடுபடா! தங்களின் விளக்கமான ஆசிரியவுரை அவ்வாறான வேகத்தை அளித்துள்ளது.

இக்கால் இளைஞர்கள் இலக்கணம் முறையே கற்றிருப்பினும், யாப்பிலக்கணமின்றிப் பாடல் வடித்தலை, 'நன்னன்' அவர்கள் உணர்வுகளோடு ஒன்றிய பாங்கோடு பகுத்துக் காட்டும் கட்டுரை "விளக்கொளி"யாய் விளக்கந் தந்து நம்மைச் சீர்படுத்திக் கொள்ள அழைக்கின்றது.

"தென்மொழி" இதழின் இருபத்து எட்டாமாண்டின் பணி சிறக்கட்டும்! அன்புடன், பாவலர். இராவணதாசன், சென்னை-23.

"தென்மொழி"

சென்னை-5

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

ஆண்டுக் கட்டணம்	:	உருபா 20.00
அரையாண்டுக் கட்டணம்	:	„ 10.00
தனியிதழ்	:	„ 1.75

ஓரிதழுக்கு உருபா 3.50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க !

கருநாடகத் தமிழரின் காப்பற்ற வாழ்க்கைநிலை!

கடந்த ஆண்டு நவம்பர் 30-ஆம் நாள் கன்னட எழுத்தாளர்கள், கலைஞர்கள் கருத்தரங்கம் ஒன்று வெங்காலூர் (பெங்களூர்) நகரில் கூடியது. அதில் தங்கள் மாநிலத்தில் குடியேறும் அயல் மாநிலத்தவரைக் குறிப்பாகத் தமிழ்நாட்டவரைத் தடுத்து நிறுத்துவது பற்றிக் கருத்துகள் பரிமாறப் பெற்றன.

அதில், பொருளியல், குமுகவியல் மாற்றங்கள் தொடர்பான பயிற்சி நிறுவன இயக்குநர் பர். கோ. திம்மையா அவர்களும், வெங்காலூர் பல்கலைக்கழகத்தின் அரசியலறிவியல் துறைத் தலைவர் பேரா. கே. எச். செலுவராசு, கன்னட இலக்கியக் கழகத் தலைவரும் முன்னாளைய நகரத்தலைவரும் ஆகிய திரு. கே. கே. நாராயணா ஆகியோரும், மற்றும் இந்திய மேலாளுமைப் பயிற்சிக் கல்லூரி ஆசிரியர் திரு. பர். ஏ. சண்முகம் அவர்களும் கலந்து கொண்டு கருத்துரையாற்றினர்.

அவர்கள் அனைவருமே, வெளிமாநிலங்களிலிருந்து குடியேறும் அயல் மாநிலத்தவர்களிடமிருந்து கருநாடகர் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பினர். அவர்கள் குறிப்பாகத் தமிழர்கள் கருநாடக மாநிலத்தில் வாழ்ந்து வருவதையே சுட்டிக் காட்டிப் பேசினர்.

கன்னடியர்களுக்குக் குடியிருப்பதற்கு வீடுகளும், வாழ்வதற்குப் பணிகளும் கிடைக்காத பொழுது, தமிழர்கள் அங்கு வாழ்வதை அவர்கள் விரும்பவில்லை. அவர்களை எவ்வாறேனும் வெளியில் விரட்டுவதற்கு அனைத்து முயற்சிகளையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் செய்து வருவது அவர்கள் பேச்சுகளிலிருந்து புலப்பட்டது.

கன்னட அரசு இந்த வகையில் தக்க பாதுகாப்புச் செய்து தரவேண்டுமென்றும் கோரிக்கை விடப்பட்டது. இச் செய்தி இந்து முதலிய செய்தித் தாள்களிலும் வந்துள்ளது.

இந் நிலையில் தமிழர்களுக்கு அங்குக் குடியிருக்க வீடும் வாழ்க்கை வசதிகளும் கிடைப்பது அரிதாக இருக்கின்றது. கன்னடியர்களுக்குக் கருநாடக மண்ணின் மீதும், மக்களின் மீதும் உள்ள பற்றின் காரணமாக அவர்களின் விழிப்பான, காப்பான அதே சமயத்தில் தமிழர்களுக்கு எதிர்ப்பான, வலிவான குரலை அவர்கள் எழுப்புவதையும், தாளிகைகள் அவற்றை வெளியிட்டு அவர்களுக்கு ஆதரவு தேடுவதையும் அறிகின்ற அதே நேரத்தில், தமிழ்நாட்டில் தமிழர்கள் விழிப்பின்றி ஏமாளிகளாய் வாழ்வதையும், தம்மினப் பற்றோ தம் நாட்டுப் பற்றோ அறவே இல்லாமல் இருப்பதையும் அன்பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம். 0

விடுதலையுணர்வு பொங்கட்டும் !

பொங்குதடா இன்றுபொங்கல் தமிழர் வீட்டில்
பொங்கவில்லை யடாவீரம் தமிழர் நாட்டில்
கங்குலிலே காலிடறி வீழு கின்றார்
காலமெலாம் அடிமையென வாழு கின்றார்!
வெங்கொடுமைச் சாக்காட்டில் தோள்பு டைத்து
விளையாடி வென்றுபொங்கல் வைப்ப தென்றோ?
செங்கதிராம் விடிவெள்ளி தோன்ற லென்றோ?
செந்தமிழர் திருநாட்டை மீட்ப தென்றோ?

சொந்தத்தாய் நாட்டினிலே அடிமை செய்து
சோற்றுப்பிண் டங்களென வாழு கின்றார்!
வந்தாரை யெலாமிங்கு வாழ வைத்து
வந்தார்காண் தெருவுக்கு! வாழ்வி ழந்து
நொந்துகண்ணீர் பொங்கஇன்று வருந்து கின்றார்!
நொடிந்துமிக இரந்துண்டு வாழு கின்றார்!
சிந்தித்துப் பார்த்திந்த இழிவை நீக்கச்
சிலிர்த்தெழுவ தென்றோநந் தமிழரெல்லாம்?

அரசியல்சீர் பொருளியலின் வளங்க ளெல்லாம்
அயலாரின் வீட்டிலின்று பொங்கக் கண்டோம்!
தரங்கெட்டுப் போய் வணிகம் தொழில்க ளெல்லாம்
தமிழரின்கை விட்டுப்போய்த் தாழக் கண்டோம்!
மரக்கட்டை போல்உணர்ச்சி யின்றி வாழ்வார்
மரத்தமிழர் கண்ணீரே வாழ்வில் பொங்க!
வரலாற்றுப் பெருமையெலாம் மங்கி இன்று
வண்டமிழ மாந்தர்பின் தங்கக் கண்டோம்!

பெரும்பதவி தனிலின்று மாற்ற லர்கள்
பெருகியின்பம் பொங்கிடவே வாழு கின்றார்!
மருகியிந்த மண்மாந்தர் சாகின் றாரே!
மதியிருந்தும் சிந்திக்க மறுக்கின் றாரே!
பொருதுகளம் புகுவதொன்றே வாழ்வி லின்பம்
பொங்கவழி வகுக்குமிதைப் புரிந்து கொண்டே
எருதாக விழுப்புண்கள் ஏற்று நாட்டை
மீட்கின்ற நாளன்றோ, நமக்குப் பொங்கல்!

(பாவலர். தமிழ்க்குமரன், ஈரோடு)

பறம்பை அறிவன்-பக்கம்

1. இந்திய 'தேசிய'ப் பண்பாடு

'தேசியப் பண்பாட்டு விழா'- 'நமது திருவிழா' என அறிமுகம் செய்யப்படுகிறது. அதனை இந்தியில் "அப்னு உத்சவ்" என்று அறிமுகம் பண்ணுகிறது அரசு! ஏழு மண்டலங்கள், 4000 கலைஞா கள், 21 நாள் கொண்டாட்டம், 4 கோடி உருபா செலவு. 'இந்திரா வில' (இந்திரா தனுசு) பறக்கிறது.

பக்கம் பக்கமாக நாளிதழ்களில் விளம்பரம் அடுபடுகிறது வானில்!

கலைஞர்களின் தேசியக் கலை வண்ணம் மாநிலங்கள் சந்திப்பில் வெளிப்படுகிறது. 'இந்தியா' என்ற 'மந்திரம்' ஆளுகின்ற கும்பலை மகிழப் பண்ணலாம். இலங்கை அரசையும், அரசிகளையும் பரவிப் பாடிய பாடலையே நம் இந்திய இசையாக்கி மகிழவும், ஆடவும் செய்வதில் பயனில்லை.

இயல்பான உரிமைகளைத் தடை செய்யாமலிருப்பதும், தன் சாய்காலை வளர்த்துக் கொள்ள மற்றவர் உரிமைகளைப் பறித்து வளமாக்கிக் கொள்ள நினைப்பதும், முயல்வதும் தீங்காகவே முடியும். இந்த எச்சரிக்கையினை உணர்ந்து கொண்ட சாயலை அரசிடம் காண முயல்கிறோம்!

2. தமிழ்நாடுதானா?

ஆங்கிலம் அடைத்துக் கொண்டு தமிழை எட்டிப் பார்க்க வைக்கிறது. இது தமிழ்நாட்டின் நிலை. இந்தி சுவர் ஏறிக் குதிக்கிறது. ஓரிரு கனிகள் களவு போன பின் கவலைப் படுகின்றோம். தமிழன் திறமையை வழிப்பறி செய்து கொண்டிருப்பவரையும், காவல் என்ற பெயரில் உரிமையைத் தடை செய்பவரையும் நாட்டில் காண்கிறோம்.

மொழியின் ஆட்சி, அருமைகளை அறிந்திருந்தும் கலவையின் பண்பாட்டழிப்புக்கு ஆளாகிப் போகின்றனர். சுவை, இனிமை காண்பதாகக் கருதிக் கொண்டு இரவல் சோற்றிற்கு அலைகின்றார்கள்.

மக்களின் மதிப்பீடுகளை மறந்து தங்களின் வணிக வேட்கைக்குக் காரணம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழர் பிறர் அருமைகளைப் போற்றுவதாகக் கருதி அதன் சிறப்பியல்களைத் தமிழ் வளர்ச்சி என்ற போர்வைக்குள் மூச்சுமுட்ட வைப்பது சரியன்று. எண்ணிப் பார்ப்பார்களாக.

3. விடுதலைப் போராளிகள்

விடுதலைப் போராளிகள் கருவியேந்தவும், காலம், வரலாறு, நிகழ்ச்சிப் போக்குப் பற்றிக் கணிக்கவும், அமைப்பின் மதிப்பைத் திறம்பெறக் காக்கவும் அறிந்தவர்களாக இருத்தல் வேண்டும். அரசியல் தவறு அடிப்படையில் நிகழா வண்ணம் கவனம் காட்டுதல் வேண்டும். இதனையே, ஈழப்போராளிகள் தமிழ்நாட்டில் கருவிகளைக் கையிழந்து நிற்கும் இந் நேரத்தில் படிப்பினையாகக் கொள்வார்கள் என நம்புகிறேன்.

விடுதலை வீரன், மற்றொரு விடுதலை வீரனின் பெருமிதம், மதிப்பு பற்றி அக்கறை காட்டுவதியல்பு.

தமிழ்நாட்டு 'அரசியல்' தொடர்பு ஈழப் போராளிகளுக்குப் பெருமிதமோ, மதிப்போ கொடுத்ததென்று கூற முடியவில்லை. இதனையே 'செயவர்த்தனே பெங்களூர் மாநாட்டிற்கு வந்த' அந்த நேரத்தில் தமிழக - இந்திய அரசுகள் போராளிகளின் கருவிகளைக் கைப்பற்றவும் காவலில் வைக்கவும் எடுத்த நடவடிக்கை சுட்டிக் காட்டும்.

4. நாள் குறிப்பு

'தினகரன்' இதழ் அ. தி. மு. க. வின் போராட்ட உணர்வைத் தூண்டிவிட்டும் கிளறிவிட்டும் ஆசிரியவுரை எழுதியுள்ளது.

அரசியல் சட்டம் இந்திப் பிரிவினை மட்டுமன்று; கோரிக்கை நிறைவேறாவிட்டால் முழு அரசியல் சட்டத்தையும் எரிப்போம் என்று தி. மு. க. தலைவர்கள் பேசி வருகிறார்கள்.

மொழிச் சிக்கல் சூடுபிடித்துள்ளது. ஆனாலும் 'நமது கழகம்' சோமசுந்தரம் அ. தி. மு. க. வில் இணைந்து விட்டுப் பதவி பெறுவதில் அக்கறை காட்டியிருக்கிற செய்தியும் வருகிறது.

போராட்டம் தொடரவும், ஆற்றலை வளர்த்துக் கொள்ளவும் இந்த இணைப்பு உதவுமென்றால் நல்லதுதான். ஆனால், நீருடன் நெருப்பிணையும் காட்சியையே இங்குக் காண முடியும். மக்கள் புகை மண்டலத்தில் மீண்டும் திணறப் போவது தெளிவாகி விட்டது.

காலம் காலமாகப் பதவிக்காகக் கட்சி பிரிப்பதும், சேர்ப்பதும் போட்டி போடுவதும் சண்டை கட்டுவதும் நாட்டு வழக்கமாகிக் கொண்டிருக்கின்றது.

இளைஞர்கள் விழிப்பூட்டப் பெற்றதும் தலைமையைச் சுட்டுச் சுடர்வீசச் செய்வார்கள் என நம்புவோம்.

5. அருள்நேயனுடன்

இளைஞர்களிடையே நல்லுணர்வு காண்கின்றபோது மனம் மகிழ்கின்றது. அருள்நேயன் உ. த. மு. க. கூட்டம் பற்றி உசாவி அறியத் தேடி வந்தார். இன்றுதான் அவர்க்கெழுதிய அஞ்சல் அட்டையைச் சேர்த்தேன் அஞ்சல் பெட்டியில் !

மெய். அருண்மொழியனைக் காணவும் பேசவும் முயன்றேம் முடியவில்லை. அ. நெடுங்குளம் காயாம்பு '16-11-86-இல் நடக்கும் அறைக் கூட்டத்திற்கு வருகிறேன்' என்றார்.

உ. த. மு. க. என்றால் 'சௌபா' போன்றவர்கள் மொழி மொழி என்றடித்துக் கொள்வார்கள் என நினைக்கிறார்கள். மொழியின அடிப்படையிலான அரசியல் எழுச்சியை அவர்கள் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

குமுகத்தின் நிகழ்ச்சிகளைத் தொகுத்தும் வகுத்தும் பகுத்தும் பார்க்கின்ற திறத்தை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

நெடுகிலும் இயக்கமே இவர்க்கு நினைவில் நின்றது. எனக்கு இடையே குடும்பச்சூழல் அடித்து விலகியது - மறுபடி சூழ்ந்தது. நண்பர்களின் துணை இயக்கத்திற்கு வாய்க்குமெனில், என் சூழல் என் மட்டுமே ஆகிவிடும். இயக்கமும் நெறிப்படும். அலை ஓயக் காத்திருந்தால் குளியல் இயலாது போய்விடும்.

6. அரசியல் வழியில்

'அ, ஆ' சொல்லித் தருவதற்கு முன் நாட்டு நடப்பைக் கல்வியாக்கிடுக. முன்னேற்றம் பெற உதவும் வரலாற்றுப் பேருண்மைகளைக் கதைகளாக்கிக் குழந்தைகளின் கவனத்தைப் பெறுங்கள். உங்கள் பயிற்று முறை வெற்றியளிக்கும்' என்ற கருத்தினைப் 'புதிய கலாச்சாரம்' 'புதிய ஆசிரியர்' சிறுகதைப் பொறி மூலம் பெற்றேன்!

இன்று கல்வியைத் திணிப்பதில் அரசு காட்டும் கரிசனை பெரியது. தன்னல அரசின் ஏவல்காரர்களாக்கி ஆசிரியர்களை அடிமை வேலை வாங்கும் அவலத்தைப் பார்க்கின்றோம்.

"தனது சிந்தனையைத் தொடங்கிய மொழியையும், தனது குமுக வாழ்வைத் தொடங்கிய இனத்தையும் நேசிப்பது எவருக்கும் இயல்பானது. ஒவ்வோர் இனத்தவர்க்கும் தனது மொழியையும் பண்பாட்டையும் காத்துக் கொள்வதற்கு உரிமை உண்டு. இந்த நோக்கத்திற்காக இந்த வரம்பிற்குள் நின்று போராடுவது நேர்மையானது. அஃது அவர்களின் மொழி இனப் பற்றைக் குறிக்கிறது.''

—புதிய கலாச்சாரம், 'சூலை' 1986.

இந்த உரிமையை நாம் பெறுவதற்குத் தமிழர்களாகிய நாம் இந்திய மண்ணில் பெரும் போராட்டம் நடத்த வேண்டியவர்களாக

உள்ளோம். 'உரிமை உண்டு' என்பது அதற்கான போராட்டத்தில் இறங்கியவர்க்கே 'இல்லை' என்பது விளங்கும்! பல்வேறு மொழிப் போராட்ட வடிவங்கள் புதிர்களாகிப் போனதேன்? இந்திய மண்ணில் 'அடிமை'களும் அடிமைப்படுத்துபவர்களும் உள்ளார்கள். இதற்கான வகுப்புப் போராட்டம் முனைப்படையவில்லை. இம் மொழிக் கிளர்ச்சிகள் மூலம் இந்திய அரசின் அதிகாரக் கட்டமைப்பு நடுவப்படுத்தப் பட்டுக் கெட்டிப்பட்டுப் போயிருப்பதைப் புரிந்து கொள்ளலாம்!

ஈழத்தில் குருதி சிந்திக் கொண்டிருக்கும் வேளை. போராட்ட அலைமேல் அமர்ந்து 'உடன்பாட்டுப் பேச்சு' நடக்கின்ற நேரம். தமிழ்நாட்டில் 'பகுத்தறிவு' இபக்கத்திலிருந்து வந்த ஒரு கழிசடையின் கருத்து செயல்படுகிறது. ஏன்? அறநிலைய அமைச்சுத் துறையின கட்டளைபை ஏற்றுத் திருவரங்கம் கோயிலில் 'இராம செபம்' நடத்துகின்றனர். எதற்கு? 'பேச்சு' வெற்றிபெற வேண்டுமாம்! 'போராட்ட வெற்றியை' இப்படி மூடக் கருத்துகளால் திசைமாற்றும் அரசின் எடுபிடிகளைப் பார்க்கிறோம். மொழி, இன மானம் சிதைக்கச் சூழ்ச்சி பின்னும் வலையில் விழாமல் இருந்திடல் வேண்டும்!

அதற்கான எழுச்சியுரைகள், பிற இன ஒடுக்குமுறையினை ஊக்கக் கூடியதாக இருத்தல் கூடாது. இதில் நமக்கு வேறு கருத்தில்லை.

என்றபோதும், 'இந்தி ஆதரவு இயக்கம்' என்ற பேரில் 'திராவிட' இயக்கத்தின் மூல வேரினைத் தாக்கி அழித்தாக வேண்டும்' என்ற நினைப்பு ஏற்பட்டுள்ளதே! ஏன்? 'இலிபியாவைத் தாக்கித் தகர்த்த' அமெரிக்கா போல, இசுரேலைப் போலச் செயல்படுதல் வேண்டும் என்கிறதே 'இந்தி ஆதரவு இயக்கம்!' இத்துமத வெறியும் இந்திய ஒருமைப்பாட்டு வெறியும் தமிழினத் தேசிய உணர்வைச் சிதைத்தழிக்க முயல்கின்றன என்பதன்றி வேறென்ன?

'பற்று, வெறி' என்று தமிழினத்தைக் தற்காத்துக் கொள்ளுகின்றவர் மீது பிரித்துப் பிளவுபடுத்த முயல்கின்றவர்களைப் பற்றி நாம் நினைத்துப் பார்த்தல் வேண்டும்!

வல்லாண்மை கொண்டு இந்தியைப் பரப்பும் அரசுக்கு ஆதரவு தாய்மொழியைப் பயிலவும் வழியின்றித் தடுமாறும் மக்களுக்கு எதிர்ப்பு என்பதுதான் 'இந்தி ஆதரவு இயக்கத்தின்' நிலைப்பாடாகும்! 'தேசிய நீரோட்டம்' என்றும் 'இந்தியம்' என்றும் கற்பனையை வலிந்து வன்முறை மூலம் உருவாக்கிட மீண்டும் முயல்கின்றார்கள்

20-7-86 சண்டிகார் செய்தி காலிசுத்தான் தலைநகர் தரை மட்டம்' ஆனதாகக் கூறுகிறது. உரிமை வேட்கை, எழுச்சிகளுக்

தமிழினமே! எழுக இன்றே!

பாவலர். சின்னப்பனார்.

நந்தமிழ்த்தாய்த் திருநாட்டைத் தனிநாடாய் ஆக்கிடவே
நாம்துணிந்தே முனைந்தின்றே நில்லா விட்டால்
செந்தமிழும் இங்கில்லை; கலை, பண்பா டிங்கில்லை;
தமிழினத்தின் வரலாறும் இங்கே யில்லை!
இந்திமொழி கூத்தடிக்கும் இந்துப்பண் பாடு, கலை
எக்காள மிட்டுநடம் இங்கே ஆடும்!
இந்துமதம் கொழுப்பேறித் தலைகனத்துத் தலைவிரித்தே
எல்லையிலா வெறியாட்டம் போடுந் தானே!

மொழிப்பற்றும் இல்லாமல் இனப்பற்றும் இல்லாமல்
வயிற்றுப்பற் றேகொண்டு தமிழ ரெல்லாம்,
எழில்தமிழைத் தாம்மறந்தே இனமதனைத் தாம் மறந்தே
இந்திமொழி தனைப்பேசித் தமைம றந்தே
இழிந்தோராய் வடவருக்கே என்றென்றும் அடிமைகளாய்
இருந்திங்கே பிழைக்குநிலை வந்தே தீரும்!
அழிவுநிலை இதைத்தவிர்க்க இன்றேநாம் அனைவோரும்
அரிமாவாய் வரிப்புலியாய் மாறு வோமே!

வெள்ளந்தான் வருமுன்னே அணைபோட்டுக் கொள்ளாமல்
வந்தபின் பார்ப்போமென் றுரைத்தே ஏய்க்கும்
உள்ளத்தோர் கிடக்கட்டும்; உணர்வுள்ளோர் விலகட்டும்;
ஒதுங்கியே பதுங்கட்டும் உயிர்ம திப்போர்!
கள்ளன்போல் நள்ளிரவில் வடவரிடம் வந்திட்ட
கொடுங்கோன்மைத் தன்னாட்சி தனக்கு முற்றுப்
புள்ளியிட்டு நிறுத்துகிற தமிழ்நாட்டு விடுதலைக்குப்
போரிடவே தமிழினமே! எழுக! இன்றே!

(முன் பக்கத் தொடர்ச்சி)

கான அடிப்படையை ஆராயாமல், 'தகர்ப்பு' வேலைகளில் ஓர் அரசு ஈடுபடுமானால் அதன் 'நகர்வலக் காட்சி'களின் பின்னே, அதற்குள்ள பேடிமைத்தனமும், அச்சமுமே கால் கொண்டிருப்பது தெளிவாதல் உறுதி.

'மக்களாட்சி' என்ற 'போர்வை', போராடும் மக்களின் விழிக் கனலால் பொசுங்கிப் போகும். அப்போது, அரசின் கொடுமை யான உருவம் வெளிச்சமாகிவிடும்!

நாகாலாந்து, பஞ்சாப் தீர்வுகள், அசாம் தீர்வு என்பவெல்லாம், புதிய தலைமுறைகளுக்குப் பொய்த்தேவுகளாகவே படும். எனவே, வருங்கால வரலாற்றில் தீராப் பழியைத் தேடிக்கொள்ள வலிந்து வன்முறையைக் கையிலெடுப்பது 'இந்திய அரசு'க்கு அழகாகாது!

பக்கம் வெளியிடுவீர்களா? இ'து என் நீண்ட நாள் ஆவல். உங்களின் புகைப்படம் ஒன்று எனக்குத் தேவையாய் இருக்கிறது' ஆகையால் எல்லைக் கடவு அளவு ஒன்று விடுக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். 'தலையங்கம்' என்ற சொல் தமிழ்ச் சொல்லா?

—மா. அறவாழி கீழக்கோட்டை,

(ஆசிரியர் குறிப்பு: படம் தேவையில்லை. என் கருத்துகளே போதும் தலையங்கம் என்னும் சொல்லில் பிற்பகுதி வட சொல். ஆசிரியவுரை என்பதே அதற்குரிய தமிழ்ச்சொல்.)

1193: தமிழினக் காவலர் பாவலரேறு ஐயா அவர்களுக்குத் தமிழ் வணக்கம். அரசியல், பொருளியல், குமுகவியல், மொழியியல் போன்ற பல்வேறு நிலைகளிலும் தமிழகம் போட்டி போட்டுக் கொண்டு பின்னுக்குப் போகின்றது. அடிமைத் தன்மை தமிழனின் குருதியோட்டத்தோடு இரண்டறக் கலந்து, தன் இனத்தின் தனித் தன்மைகளைக் கரைத்துக் கொண்டுபோய், முற்றும் அற்று விடும் கேடு சூழ்ந்துள்ளது. இத்தகு இழிதகு பொதுச்சூழலுக் கிடையில் வெளியார் பகையிலும் உண்மைத் தமிழ்த் தொண்டர்க்குப் பல் குழுவும் உட்பகையும் மிக்க நம்மவர்களே உடனிருந்து கொல்லும் நோயன்னர் ஆவார். யாது செய்வது? நம் இனத்தில் காட்டிக் கொடுப்பான்களும் கால்கழுவிக் குடிப்பான்களும் இன்று நேற்றன்று நம் வரலாற்றுக் காலந்தொட்டே இருந்து வருகின்ற மானமற்ற இழிநிலை நம் நிலை, பல்வேறு எதிர்ப்புகள் இடையில் எதிர்நீச்சலிடும் தங்களை வாழ்த்துகிறேன். வாழவேண்டிய எண்ணமிருப்பின் தமிழினம் தாங்களின் வாழ்நாளிற்குள் விழித்துக் கொள்ளட்டும். இல்லாயின் வீழ்ந்துபடட்டும்.

1. ஐயா தங்களின் நூற்சிரியம் இரு தொகுதிகளையும் தாங்களின் இல்லத்தில் தங்களிடம் பெற்று வந்து, படித்துத் தமிழின்பம் துய்த்தேன். தாங்கள் தற்போது எழுதிவரும் நூற்சிரிய உரையில் முன்பு இருந்ததைப் போல் **சொல்லாய்வு** இன்றி வெளியிட்டு வருகிறீர்கள். பொது உரையோடு(முகம், மனம்-மன்னுதல்) போன்ற அரிய சொற்பொருள் விளக்கங்களை முன்புபோல் எழுதி நூற்சிரியத்திற்கும் 'மேலும்' மெருகூட்ட வேண்டுகின்றேன்.

2. தென்மொழியில் 'சொல்லாய்வு' என்று ஒரு பக்கம் ஒதுக்கிச் சொல்லியல் கட்டுரை வெளியிடுக. 'உருவாகிவரும் பாவாணர்' அருளி அவர்களின் கண்டுபிடிப்புகள் தென்மொழியில் கட்டாயம் இடம்பெற வேண்டும். நான் தஞ்சைப் பல்கலைக் கழகத்தில் அன்பர் அருளியிடம் பலமுறை இதை வற்புறுத்தினேன். தாங்கள் முயன்று அவரின் அறிவுச் செறிவைத் தென்மொழியன்பர்க்குத் தாருங்கள்.(அவர் கூறியது போல்) அவரால் எழுத நேரமில்லையாயின் அவரின் பழைய சுவடிகளையாவது மீண்டும் வெளியிடுக.

3. தங்களின் திருக்குறள் பற்றிய சொற்பொழிவுகள் நூல் வடிவம் பெறுமா? தங்களின் 'குறள் சொற்பொழிவு அடங்கிய ஒலி நாடாக்கள்'' கிடைக்குமா? பழைய 'தமிழ்நிலம்' சுவடிகள் கிடைக்குமா விலைக்கு? -மா. காமராசன். பொறி. இ. அரியலூர்,

1194: உலகத் தமிழினத் தலைவர், தனித் தமிழ் அரிமா ஐயா பெருஞ்சித்திரனார் அவர்கட்கு அமுதத் தமிழ் வணக்கம். ஐயா! தாங்கள் எத்தனையோ பணிச்சுமைகளுக்கிடையிலும் தொல்லை பாராது விடை மூடங்கல் விடுத்தீர்கள். ஆனால் நான் அதற்கு

மறுமொழி விடுக்கவில்லை. நான் விடை முடங்கல் விடுக்காத தற்குக் காரணியம் மலேசிய இந்தியப் பேராயக் கட்சி(ம. இ. காங் கிரசு)சுங்கை நகரக் கிளையின் தேர்தலே.

இத்தேர்தலில் சாதி வெறி பிடித்தலைந்த ஒரு குழுவினரை இருக்கும் இடம் தெரியாமல் ஆக்கிவிட்டோம். இருப்பினும் மறு பலனை எதிர்பாராது தாங்கள் ஆற்றும் இன, மொழி, நாட்டுத் தொண்டை விட, நாங்கள் செய்த, இந்த அரசியல் தொண்டு முகாமையானது அன்று.

அதற்காக வருந்துகிறேன் ஐயா; எதிர்வரும் காலங்களில் இம் மாதிரியான தவறுகள் ஏற்படாது என்பதற்கு உறுதியளிக் கின்றேன்.

தங்களுடைய கருத்துகளைத் தொகுத்து வெளியிடத் தங்களின் இசைவு கேட்டிருந்தேன். முடிந்தளவு திங்கள் தோறும் வெளி யிட்டு, இலவயமாக வழங்க முடிவு செய்துள்ளேன். விரைவில் அதன் படியை அனுப்பி வைக்கிறேன்.

அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்திற்காக தி. மு. க. தலை வர் கருணாநிதியைத் தளை செய்தால், எல்லாம் முடிந்து விடுமென்று தப்புக் கணக்குப் போட வேண்டாம். "அவரைத் தளை செய்தால் அடுத்து நடத்தப் போவது போராட்டமாக இருக்காது. தனித் தமிழ்நாடு வெளியறிவிப்பாகத்தான் இருக்கும்" என்று எச்சரிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். இவ்வாறு கோவை இந்தி ஆளுமை எதிர்ப்பு மாநாட்டில் தி. க. பொதுச் செயலர், மானமிகு கி. வீரமணி அவர்கள் பேசியதாகத் தாளிகையில் செய்தி வெளிவந்தது.

இந்த வேளையிலாவது வீரமணி அவர்களுக்குத் தமிழ்நாட்டு விடுதலை உணர்வு வந்துள்ளதே என்று மகிழ்ந்த மறுகணமே, அவருடைய இனவுணர்வை, மொழியுணர்வை நினைத்து வெட்கப் பட்டேன். "கருணாநிதி தளை செய்யப்பட்டால்" அப்படியானால் கருணாநிதி மட்டுமதான் தமிழரா? பேராசிரியர் அன்பழகனோ, ஏனைய கழகத் தொண்டர்களோ தமிழர்கள் இல்லையா?

"ஆட மாட்டாதவள் அரங்கம் கோணல்" என்று கூறிய தைப் போலுள்ளது திரு. வீரமணியின் இந்தப் பேச்சு.

தமிழினத்திற்கும் தமிழ் மொழிக்கும் இவர்கள் செய்யும் செயல்களைத் தமிழகத் தமிழர்கள் கவனிக்காவிட்டாலும் கூட, உலகத் தமிழர்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். உலகத் தமிழர்கள் தனித்தமிழ்நாட்டைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள் என்பதனைத் தெரிந்து கொண்ட இவர் களைப் போலியார் அவர்களின் ஆதரவைப் பெறுவதற்காகவே இவ்வாறு பேசத் தொடங்கியுள்ளனர் போலும்!

இந்தி எழுத்துகளை அழிக்கிறார்களாம்; போராட்டம் நடத்து கிறார்களாம்; தம்முடைய சொந்த மண்ணில் தம்முடைய மொழிக் காகப் போராடுவது, இந்த அரசியல், குமுகாயத் தலைவர்களுக்குப் பெருமையாக இருக்கலாம். ஆனால் பல இன மக்களிடையே வாழ் கின்ற எங்களைப் போன்ற வெளிநாட்டுத் தமிழர்களுக்கு இதைவிட வெட்கக் கேடான செய்தி வேறொன்றுமில்லை. இதற்கெல்லாம்

(தொடர்ச்சி உள்ளே 24-ஆம் பக்கம் பார்க்க)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)